# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

மே 2009 ஜீவியம் 15 மலர் 1

*இம்மாத மலரில்....*

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| இம்மாதச் செய்தி | 2 |
| அன்பு அமிர்தமாகி அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு | 3 |
| லைப் டிவைன் | 10 |
| ஆன்மாவிலிருந்து செயல்பட்டால் | 24 |
| சாவித்ரி | 27 |
| யோக வாழ்க்கை விளக்கம் V | 29 |
| தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும் | 35 |
| ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள் | 36 |
| லைப் டிவைன் - கருத்து | 40 |
| பூரண யோகம் - முதல் வாயில்கள் | 42 |
| நல்லெண்ணம் | 50 |
| அஜெண்டா | 56 |
| அன்பர் கடிதம் | 59 |
| மரபு வழி வந்த ஆன்மீகமும், அன்னை ஸ்ரீ அரவிந்தரின் பூரண ஆன்மீகமும் | 61 |
| மனிதனுடைய இன்றைய நிலைமையும் அன்னை அவனுக்கு வழங்க விரும்புவதும் | 63 |


❀❀❀

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

## ஜீவியத்தின் ஓசை

நடக்காதது அனைத்தையும் அன்னை நடக்க வைக்கிறார். நாம் சாதிக்க அவற்றுள் ஏதேனும் ஒன்றே போதும்.

பேசப் பிடிக்காத மௌனம், பேச முடியாத மௌனம், பேச்சையிழந்த மௌனம், சொல் உருவாகாத மௌனம், செயலற்ற மௌனம், அசைவையிழந்த மௌனம் ஆகியவற்றைக் கடந்தது பிரம்ம மௌனம்.

நம்முடைய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள ''அன்னையின் திருவுள்ளம் நிறைவேறட்டும்'' என்ற மந்திரத்தைப் பயன்படுத்து-கிறோம்.

இம்மாதச் செய்தி

**சத்தியமிருந்தால்**

**சத்தியஜீவியம் சித்திக்கும்.**



# அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும் அழைப்பு

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## எதைச் செய்வது, செய்வதுஎன்றால் என்ன?

✡ நாமனைவரும் எதையோ ஒன்றைத் தீவிரமாக, இடைவிடாது, பூரண ஆர்வத்துடன் உஷாராகச் செய்துகொண்டிருக்கிறோம். அது இல்லாதவரில்லை. சோம்பேறி, உதவாக்கரையும் அப்படிச் செய்கிறான். அதற்குரிய மையம் 'நாம்', நம் ஆசை, அபிலாஷை, நம் இன்றைய இலட்சியம், நம் புத்தி இடைவிடாது செயல்படுகிறது.

***நாமுள்ள இடத்தில் அன்னையை வைக்க வேண்டும்.***

❀ 'நாம்' மாறி அன்னையாவது செய்வது. அதை எப்படிச் செய்வது?

❀ எளிமையான அளவில் செய்ய அன்னையை நினைத்துச் செய்வது.

❀ பூரணமாகச் செய்ய சமர்ப்பணம் செய்து காரியத்தைச் செய்வது.

❀ வரும் 141 பக்க கருத்துகளும் சமர்ப்பணத்துள் அடங்கும்.

இங்கு எழுதப்படுபவை சமர்ப்பணம் செய்ய முடியாத பொழுது செய்யக்கூடியவை.

❀ சமர்ப்பணம்என்றால் என்ன?

❀ எண்ணம், உணர்வு, செயல்என மனதில் எழுந்து, ஆர்வம் பெற்று, செய்கிறோம்.

❀ படிக்க புத்தகம் எடுப்பதன்முன் செய்யும் சமர்ப்பணம், கை செய்யும் சமர்ப்பணம் (physical consecration).

❀ படிக்க ஆர்வம் வருமுன் சமர்ப்பணம் செய்தால், அது உயிரால் செய்யும் சமர்ப்பணம் (vital consecration).

❀ நினைவு எழுமுன் செய்வது மனம் செய்யும் சமர்ப்பணம் (mental consecration).

❀ நினைவுக்கு, (1) நினைவு, (2) சூட்சுமஎண்ணம் subtle thought

என்ற இருநிலைகள் உண்டு. சூட்சுமஎண்ணம் சமர்ப்பணமாவது பெரியது. காரியம் உடனே நடக்கும், நடப்பது பூரணமாக இருக்கும், அளவு கடந்து பெரியதாக இருக்கும்.

❀ 10 இலட்ச ரூபாய் ஆர்டர் எதிர்பார்ப்பவனுக்கு உடல்சமர்ப்பணம் physical consecration அதைப் பெற்றுத் தரும். அடுத்த நிலை சமர்ப்பணம் ஆர்டரின் அளவு, தரம், மீண்டும்மீண்டும் வருவது (capacity to recur) அதிகமாகும். முடிவான நிலை சமர்ப்பணம் தினமும் 10 இலட்ச ஆர்டர் நிரந்தரமாக, சாதகமாக, சௌகரியமாக வரும், வந்தபடியிருக்கும்.

**நம் பழைய வாழ்வை நினைவுகூர்ந்து, அதை அன்னை வாழ்வாக்க வேண்டும்.**

அன்னை வாழ்வென்றால் என்ன?

கெட்டது போய், நல்லது வரவேண்டும், அதுவே அன்னைவாழ்வு.

அல்பம், சொல்பம் போய், அழகும், பெருந்தன்மையும் வேண்டும்.

சிறியது, குறை, சரியில்லாதது, மனத்தில் எண்ணமாகவும் எழக்கூடாது.

* "தாய்பாஷை" மறந்து பண்புள்ளதமிழ் பேசவேண்டும். நாம் மாறியதற்கு அடையாளம் இந்த நல்லனவெல்லாம் பிள்ளைகளில் தெரிய வேண்டும். பிள்ளைகள் குறை, நம் குறை.

எதையும் நல்லதாக (positiveஆக), இனிமையாக, இதமாக, பிறர் இனிக்கும் வகையில் பேசக் கற்றுக்கொள்ள வேண்டும்.

✡ **நல்லெண்ணம் என்பது அதிர்ஷ்டம்.**

மற்றவர்க்கு ஏராளமான நல்லெண்ணத்தை உவந்து அளிப்பது நல்லது.

அதனால் உலகத்தின் அபரிமிதமான நல்லெண்ணத்தை அனைவரிடமிருந்து பெறலாம்.

❀ இதை நாம் சரியாகச் செய்வதற்கு அடையாளம் *அனைவரும்* நம்மைக் காண, பேச பிரியப்படவேண்டும்.

❀ "உங்களைப் பார்க்கவேண்டும்என வந்தேன்" என்று கூற வேண்டும்.

* நாம் சிறு வயதில் கற்றுக்கொண்ட மட்டமான பாஷை.



❀ சம்மந்தமில்லாதவர் அதைச் சொல்வது சிறப்பு.

❀ எதிரி கூறுவது முடிவான சிறப்பு.

❀ எதிரிஎன்று இருக்கக்கூடாது.

❀ "பெரியாரிடம் கிடைக்காத அன்பு இராஜாஜியிடம் கிடைத்தது" என்று அண்ணாதுரை கூறினார். அதைப்போல் தாயாரிடம் கிடைக்காத அன்பு மாமியாரிடம் கிடைத்ததுஎன மருமகள் கூற வேண்டும்.

❀ யார் சரியில்லைஎன்று நாம் கூறினாலும், நாம், நாம் மட்டுமே சரியில்லைஎனப் பொருள்.

❀ அனைவரும் நம்மிடம் சரியாக நடப்பது நம் பொறுப்பு. நாம் மட்டுமே பொறுப்பு. எது வருவதானாலும் எல்லோர்க்கும் முதலில், எனக்குக் கடைசியில் வரவேண்டும்.

நம்மைச் சுற்றியுள்ள அனைவரும் நம் அகஉணர்வை ஆழமாக, தெளிவாக, அர்த்தபுஷ்டியுடன் பிரதிபலிக்கின்றனர்.

"உன் நண்பர்களைக் கூறு, நீ யார்எனக் கூறுகிறேன்" என்பது பழமொழி.

❀ நாம் எவர்மீது கூறும் குறையும் நம் குறை மட்டுமே.

❀ குறை தெரிவது குறையான பார்வை - குறையான ஜீவன்.

❀ (Mother First, Mother Last) அன்னையை நினைக்க வேண்டும், அன்னையைமட்டும் நினைக்கவேண்டும். அதை 100% செய்ய முயன்றால், பலன் 10%, 5% இருக்கும், எதிரானவை ஏராளமாக எழும்.

❀ நாம் யார்என்பதை ஏற்பது sincerity உண்மை.

❀ 100% உண்மை இலட்சியம்.

❀ உள்ளே போய்ப்பார், மனிதன் 100% பொய்.

❀ எரிச்சல் வருகிறதுஎனில் உள்ளே பொய்யிருக்கிறதுஎனப் பொருள்.

❀ உண்மைக்கு எரிச்சல் தெரியாது.

❀ மனத்தை சோதித்துப்பார். அபிப்பிராயத்தை விட்டுவிடு.

❀ ஆத்திரம் வருவதைப்பார். அதன் உண்மையை ஏற்றுக்கொள்.

❀ உடலைப்பார். நாம் விலங்காக இருக்கிறோம்.

❀ நாம் அறிவுள்ள மிருகம் (intelligent animals)என்கிறார் பகவான்.

❀ அபிப்பிராயம் வெளியிடாதே.

❀ ஓர் அபிப்பிராயத்தைக் கைவிடு, ஏராளமான சக்தி வெளிப்படும்.

❀ நம்மை 100% நல்லவனாகக் கருதி, நம் செயலை ஆராய்ந்து பார்.

❀ மீண்டும் நம்மை 100% கெட்டவனாகக் கருதி நம்மை ஆராய்ந்து பார்.

## நல்லெண்ணம்

'அன்பான அபரிமிதம்', 'அமிர்தமான அபரிமிதம்', 'அன்பு அமிர்தமாகி, அபரிமிதம் அனந்தமாகும்' என்பவை நான் திரண்ட செல்வத்தை அடையும் வகையைப்பற்றி எழுதிய கட்டுரைக்குப் பல சமயங்களில் கொடுத்த தலைப்புகள். அதில் கூறும் 51 முறைகளில் *'நல்லெண்ணம்'* ஒன்று. ஓர் அன்பர் நல்லெண்ணம்என்றால் என்ன என்ற கேள்வியை எழுப்பினார்.

✡ ஒருவருக்குச் சிரமம் வந்தால், அதைக் கண்டு சந்தோஷப்படுபவர் உண்டு. அப்படிப்பட்டவர் மட்டுமேயுள்ள ஸ்தாபனங்களுண்டு.

✡ ஒருவருக்கு நல்லது நடந்தால், அதைக் கேட்டுப் பாராட்டும் அளவுக்கு உண்மையில் நல்லெண்ணமில்லாதவருண்டு. அப்படிப்பட்டவர் மட்டுமே உள்ள வீடும் உண்டு.

இதுபோன்ற வீட்டில் பிறந்தவர், இதுபோன்ற ஸ்தாபனங்களில் வேலை செய்பவர் இரு வகையினராக இருப்பார்கள். ஒரு வகையினர் அரிது, அடுத்தது பரவலான உண்மை.

✡ பண்பான வீட்டில், ஊரில் பிறந்து பண்பற்ற மக்களிடையே வந்தவர். இவர் சூழ்நிலை இவர் மனநிலைக்கு எதிரானது.

✡ தம் மனத்திலுள்ளது சூழ்நிலையால் பிரதிபலிப்பது.



எண்ணமே கெட்டதுஎன அன்னை கூறுகிறார். அது யோகத்திற்குரிய விளக்கம். நல்லெண்ணம், கெட்ட எண்ணம்என நாம் அறிவோம். மக்கள் பல வகையினர்.

✡ நடக்க முடியாத விஷயத்தில் அனைவர் மீதும் நல்லெண்ணமுள்ளவர்.

✡ வேண்டியவர்கட்கு நல்லது நடக்கவேண்டும் என்பவர்.

✡ வேண்டாதவராக இருந்தாலும் தமக்கு நஷ்டமில்லாதவரை, பிறருக்கு நல்லது நடக்கவேண்டும் என்பவர்.

✡ எவருக்கும் எந்த நல்லதும் நடக்கக் கூடாது என்பவர்.

✡ தாம் நஷ்டப்பட்டும் பிறருக்கு நல்லது செய்பவர்.

✡ தாம் நஷ்டப்பட்டும் பிறருக்குக் கெடுதல் செய்பவர்.

✡ தம் ஆதாயத்திற்காகப் பிறருக்குக் கெடுதல் செய்பவர்.

✡ காரணமின்றி நல்லதுமட்டும் செய்ய விரும்புபவர்.

✡ காரணமின்றி கெட்டதுமட்டும் நினைப்பவர்.

நான் கூறும் நல்லெண்ணத்திற்கு அதிகபட்சம், குறைந்தபட்சம் உண்டு.

1) வேண்டியவர், வேண்டாதவர்என்ற பாகுபாடின்றி நினைத்து, நல்லது நடக்க முடியுமானால், அதிகபட்சம் அதிகபட்சமானவர்க்கு நடக்க உணர்வால் விழைவது - அதிகபட்சம்.

2) வேண்டியவர்கட்கு நமக்கு நடக்க நாம் பிரியப்படுவது நடக்க வேண்டும்என விழைவது - குறைந்தபட்சம்.

நாம் பார்த்தது, கேட்டது, படித்ததில் எவ்வளவு நல்லது உண்டோ அது நாமறிந்த அனைவர்க்கும் நடக்க வேண்டும்என்று நினைப்பவர் ஏராளமான பேருண்டு. அமெரிக்கா செல்பவர்கள் மக்கள் வசதியாக வாழ்வதைக் காண்கிறார்கள். நம் நாட்டில் அந்தநிலை வர வேண்டும் என நினைக்காதவரில்லை. அதை *உணர்ச்சிபூர்வமாக விழைவது நல்லது.*

குறைந்தபட்சம் எளிமையானது. என் சம்பளம் 10,000 ரூபாய். இதில் எனக்குத் துண்டு விழுந்து, கடன் 70,000 ரூபாய் சேர்ந்துவிட்டது. பாரம் அதிகம். இந்தக் கடன் தீர்ந்து, மாதம் துண்டு

விழக்கூடாது, மிச்சமாக வேண்டும்என்பது எளிய நினைவு. வீடு, கார் அவசியமான நாட்கள் இவை. 'நான் அவற்றைக் கருதும் நிலையிலில்லை. என் பிள்ளைகள் 10, 13 வயது. இவர்கள் படிப்புக்கு என்ன செய்வதுஎனத் தெரியவில்லை'என்பது பலருடைய நிலைமை. இந்த அன்பருக்கு இந்தச் செலவெல்லாம் செய்யும் வசதிக்கு ஒரு தொகை வருவது உதவி, அதிர்ஷ்டம்எனவும் கூறலாம். அது அவருக்குப் பெரிய தொகையானாலும், பெரிய தொகையாக இருக்காது.

நம் நண்பர்கள், உறவினர் இதுபோன்ற சௌகரியம் பெற விரும்புவது நல்லெண்ணம். நமக்குள்ள தேவை அவர்கட்கும் உள்ளது. *அதை அவர்கள்பெற நினைப்பது நல்லெண்ணம்.* நமக்குரியவர் 50 அல்லது 100 பேரானால், ஒவ்வொருவரும் இதுபோன்ற வசதிபெற ஒருவர் நினைக்கலாம். நினைவு உணர்வானால், நம் எண்ணம் அவர்கள் வாழ்வில் பலிக்கும்.

✡ மத்தியதரக் குடும்பங்களில் ஓர் அன்பர் தமக்கே இந்த அளவு வசதி பெற நினைக்கலாம். மனம் நம்பாது, 'நடக்குமா?' எனக் கேட்கும்.

✡ அனைவரும் பெறவேண்டும்என்ற நல்லெண்ணம் சக்தி வாய்ந்தது. அது நமக்கும் பலிக்கும்.

✡ நாம் 50 பேருக்கு இந்த வசதி வேண்டுமென நினைத்தால், அது அதிகமாகப் பலிக்க வேண்டுமானால், சீக்கிரம் பலிக்க வேண்டுமானால் ஒரு முறையுண்டு.

❀ தனக்குக் கடைசியில் வரட்டும், மற்றவர்க்கு என்னைவிட முன் வரட்டும்என நினைப்பது பரநலம், சுயநலம் அழியும் வகை. Self-giving எனவும் கூறலாம்.

அனைவருக்கும் முன்னும், தனக்கு முடிவாகவும் வரட்டும்என்ற நினைவு உணர்வானால், அதன் சக்தி பெருகும்.

*அன்னையில் அது பெருகும் பாணி ஆச்சரியமானது.*

அன்பருக்கு எப்பொழுதும் முதலில் வரும்என்பது சட்டம்.

அன்பருக்கு வருவது அனைவருக்கும் வரும்என்பதும் சட்டம்.



அன்பருக்கு வராமல் எப்படி அனைவருக்கும் வரமுடியும்?

அன்பர் தனக்கு முடிவில் வரட்டும்என்றதால், அந்த முடிவு முதலில் இருக்கும்என்பதால், அனைவருக்கும் ஒரே சமயத்தில் ஆரம்பத்திலேயே வரும்.

**இது அன்னைசக்தி பரநலஉணர்வு மூலம் செயல்படுவது.**

✡ இதன் அடிப்படையில் அமைந்துள்ள சூட்சுமஇரகஸ்யம்,

❀ (Sincerity) உண்மையான நல்லெண்ணம்.

❀ நல்லெண்ணத்திற்கு சக்தியுண்டு. அது (Sincerity). உண்மையாலும், பரநலத்தாலும் (Self-giving), அன்னை சக்தியாலும் செயல்படுவதால், பலன் பெரியது, நிச்சயம்.

*தொடரும்....*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

துக்கமான சூழ்நிலையில் சந்தோஷமாக இருப்பது மனத்தைப் புண்படுத்தும். துக்கமும், சுகமும் எதிரெதிரான உணர்வுகள், மனிதனுக்குமட்டுமே உரியவை. மனிதச் சூழ்நிலை ஒன்றை அனுமதிக்கும், அடுத்ததை அனுமதிக்காது. சைத்தியப்புருஷனுக்குத் துக்கமில்லை. உடல் உணர்வின் சந்தோஷமும் அதற்கில்லை. துக்கமான சூழ்நிலையில் சைத்தியப்புருஷன் அமைதியாகவும், இனிமையாகவுமிருப்பான். பொருத்தமற்ற சந்தோஷத்தை வெளிப்படுத்தமாட்டான்.

***துக்கமும் அமைதியையும் இனிமையையும் கொடுப்பது சைத்தியப்புருஷன்.***

# லைப் டிவைன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

## XVIII. Mind and Supermind

There is another clear reflective mentality. Page No.169
It is behind this dynamic and vital Purusha. Para No.16
It is capable of escaping from this absorption in life.
It views itself as assuming life and body.
It does so in order to image out in active relations.
It is of energy which is perceived in will and thought.
It is the source of the pure thinker in us.
It is that which knows mentality in itself.
It sees the world in terms of mind.
It does not see the world in terms of life and body.
It is Manomaya Purusha.
We can get back to it.
We sometimes mistake it for the pure spirit.
Don't we mistake our dynamic mind for the soul?
The higher mind is able to perceive other souls as other forms of its pure self.
It can deal with them as such.
It is capable of sensing them by pure mental impact and communication.



## 18. மனமும் சத்தியஜீவியமும்

வேறொரு தெளிவாகச் சிந்திக்கும் மனப்போக்குண்டு.
இது செயல்திறன்மிக்க பிராணமயப்புருஷன் பின்னால் உள்ளது.
இது வாழ்வில் தன்னை இழக்க மறுக்கும்.
தான் - மனம் - உடலையும், உயிரையும் ஏற்பதாகக் கொள்கிறது.
சுறுசுறுப்பான தொடர்பில் பிம்பமாக வெளிப்பட அதைச் செய்கிறது.
சக்தி எண்ணமாகவும் உறுதியாகவும் ஆவது இது.
இது நம்முள் உள்ள சிந்தனையாளன்.
இதுவே மனம், மனப்பான்மை என்னஎன்று அறிவது.
இது உலகை மனத்தாலறியும்.
இது உலகை உடலாலோ, உயிராலோ அறியாது.
இது மனோமயப்புருஷன்.
நாம் இதை வந்தடையலாம்.
சில சமயங்களில் நாம் மனோமயப்புருஷனை ஆத்மாஎன நினைக்கிறோம்.
நாம் பிராணமயப்புருஷனை ஆத்மாஎன நினைப்பதில்லையா?
உயர்ந்த மனம் மற்ற ஆத்மாக்களை பிரம்மத்தின் மறு உருவங்கள்எனக் கொள்ளும்.
உயர்ந்த மனம் மற்ற ஆத்மாக்களை அப்படித் தொடர்பு கொள்ளும்.
எப்படி நம் மனத்தை அவை தொடுகின்றன, என்ன செய்தி தருகின்றன என்பதை அது பொருத்தது.

It does not sense them by vital or nervous impact and communication.
It also does so by physical indication.
It conceives too a mental figure of unity.
It acts and wills.
It creates and possesses more directly.
(Not only directly as in the physical life).
It does so in other minds and lives as well as its own.
This is pure mentality.
This too is not free from the original error of mind.
It is still its separate mental self.
It makes it the judge, witness, centre of the universe.

Through it alone we strive to arrive at its own higher self and reality.
All others are "others".
They are grouped to it around itself.
It can will itself to be free.
For that it has to draw back from life and mind.

Then it can disappear into real unity.
Still there is the veil of Avidya.
It is between Mind and Supermind.
An image of the Truth gets through.
Not the Truth itself.

Mind can get back to the Truth of things. Page No.170
For that the veil must be rent, the divided mind overpowered. Para No.17
Mind must be silent and passive to the supramental action.
Thus we find a luminous mentality reflective.



உயிரிலோ, உடலிலோ எப்படி பாதிக்கப்படுகின்றது, அங்கு என்ன செய்தி வருகின்றதுஎன்பதை இது பொருத்ததன்று.
உடல் காட்டும் அடையாளங்களாலும் அதைச் செய்கிறது.
ஐக்கியம்என்பதை மனத்தின் பிம்பமாக அது கருதுகிறது.
அது உறுதி பூண்டு, செயல்படுகிறது.
அது சிருஷ்டித்து, சிருஷ்டித்ததை ஆட்கொள்கிறது.
(உடல் வாழ்வுபோல் நேரடியாக மட்டுமன்று).
பிற மனத்திலும், வாழ்விலும் இதையே செய்கிறது.
இது தூய மனப்பான்மை.
இதுவும் மனத்தின் ஆரம்பக் குறையில்லாமலில்லை.
இருந்தாலும் இது தனிப்பட்ட மனத்தின் பிரம்மம்.
சாட்சியாகவும், உலகத்தின்மையமாகவும், நீதிபதியாகவும் அதைச் செய்கிறது.
இதன் மூலமாகமட்டுமே நாம் உயர்ந்த மனத்தையும், சத்தியத்தையும் அறிய முடியும்.
மற்றனவெல்லாம் “பிறர்”.
அவர்கள் அதைச் சுற்றியுள்ளனர்.
தான் சுதந்திரமாக இருக்க அது முடிவு செய்யலாம்.
அதற்கு மனோமயப்புருஷன் உயிரிலிருந்தும், மனத்திலிருந்தும் விடுபட வேண்டும்.
அப்பொழுது அது உண்மையான ஐக்கியத்தையடைய முடியும்.
அப்பொழுதும் அறியாமை திரையாக இருக்கும்.
அது மனத்திற்கும், சத்தியஜீவியத்திற்கும் இடையிலுள்ளது.
சத்தியத்தின் சாயல் திரையைக் கடந்து வரும்.
சத்தியம் அப்படி கடந்து வாராது.

மனம் மீண்டும் சத்தியத்தையடையலாம்.
அதற்குத் திரை கிழியவேண்டும். பிரிந்த மனம் பிரிவினையைக் கைவிட வேண்டும்.
சத்தியஜீவியச் செயலை மனம் எதிர்க்காமல், மௌனமாக ஏற்கவேண்டும்.
ஒளிமயமான மனம் இவ்விதம் பிரதிபலிக்கிறது.

It is obedient and instrumental to the divine Real-Idea.

There we perceive what the world really is.
We know in every way ourselves in others and as others.

We know others as ourselves.
We know all as the universal and self-multiplied one.

We lose the rigidly separate standpoint.
It is the source of all limitation and error.
Still all our ignorance took for truth is truth.
But it is truth deflected, mistaken and falsely conceived.

We still perceive the division.
We see the individualising, the atomic creation.
But we know them and ourselves for what they are and what we really are.
So, we perceive that Mind is a subordinate action.
It is an instrumentation also of Truth-Consciousness.
It is now separated in self-experience.
It misses the enveloping Master-Consciousness.
It now tries to set up separate house for itself.
It does not serve passively as an instrumentation.
It now attempts to possess for its own benefit.

If Mind does not do these, it will fulfil its function.
It will be a luminous fulfillment.
In Truth, it is to hold forms apart from each other.
It does so by a phenomenal delimitation of their activity.
The governing universality is behind.
That being remains conscious and untouched.



தெய்வீக முழுஎண்ணம் அதைக் கருவியாகப் பெறுகிறது. மனம் கீழ்ப்படிகிறது.
உலகம் உண்மையில் எப்படியிருக்கிறதுஎன நாம் இவ்வழியறிகிறோம்.
பிறரில் நாமெப்படியிருக்கிறோம்என அறிவோம். பிறரை அவர் போலறிவோம்.
பிறரை நம்மைப்போலறிவோம்.
உலகில் உள்ளவற்றை பிரபஞ்சத்திற்குரியதுஎனவும், ஒன்று பலவாயிற்று எனவும் அறிவோம்.
தனித்த கடுமையான நோக்கம் அழிகிறது.
இதுவே எல்லாக் குறைகளுக்கும் தடைகளுக்கும் ஆரம்பம்.
இருந்தாலும் நம் அறியாமை சத்தியம்எனக் கொண்டவை சத்தியம்.
அவை தவறாக அறியப்பட்டவை, பாதையினின்று விலகியவை, பொய்யானவை.
இன்னும் பிரிவினை தெரிகிறது.
தனித்தன்மை தெரிகிறது. அணுவாகப் பிரிந்தவை தெரிகிறது.
நாமவற்றை அறிவோம். அவையென்ன, நாம் யார்என அறிவோம்.

எனவே மனம் உபகருவிஎனக் காண்கிறோம்.
சத்தியஜீவியத்திற்கு அது ஒரு கருவி.
தன் சுய அனுபவத்தால் அது பிரிந்துவிட்டது.
சூழ்ந்துள்ள மகத்தான ஜீவியம் அங்கில்லை.
இப்பொழுது தனக்கு அது தனியே குடித்தனம் அமைக்க முயல்கிறது.
அது மௌனமான கருவியன்று.
இப்பொழுது தன் சொந்த ஆதாயத்திற்காக அது ஆட்கொள்ள முயல்கிறது.
மனம் இதைச் செய்யாவிட்டால், மனம் தன் கடமையைச் செய்யும்.
அது ஒளிமயமான பூரணம்.
சொல்லப் போனால், அது ரூபங்களைத் தனித்தனியே வைக்கும்.
தோற்றத்தால் செயலைப் பிரித்து மனம் இதைச் சாதிக்கிறது.
பின்னணியில் தலைமை தாங்கும் பிரபஞ்சம் உண்டு.
அந்த ஜீவன் விழிப்பாகயுள்ளது. அது தொடப்படவில்லை.

It has to receive the truth of things.
It must distribute it according to its perception.
It is unerring.
It is a perception of a Supreme and Universal Eye and Will.
It has to uphold an individualisation.
It is of active consciousness, delight, force, substance.
There is an inalienable universality behind.
It derives all its power, reality and joy from that universality.

It has to turn the multiplicity of the One into an apparent division.
All relations are defined by it.
It is held off against each other.
It is to meet again and join.
It has to establish the delight of separation.
It has to do so about the delight of contact.
It must be done in the midst of eternal unity.

There is also the eternal intermiscence.
It has to enable the One to behave as if He were an individual dealing with other individuals.
But it must always be done in His unity.
And this is what the world really is.
The mind is the final operation of the apprehending Truth-Consciousness.
It makes all this possible.
What we call Ignorance does not create a new thing.
It is not absolute falsehood.
It is only a misrepresentation of the Truth.
The Ignorance is the Mind separated in knowledge.
It is separated from its source of knowledge.



அது பொருள்களின் சத்தியத்தைப் பெறவேண்டும்.
தன் பார்வைக்குரிய வண்ணம் அது விநியோகிக்கப்பட வேண்டும்.
அது தவற்றையறியாது.
உயர்ந்த தெய்வத்தின் பார்வையது. பிரபஞ்ச ஆத்மாவின் உறுதியது.
தனித்தன்மையை அது ஆதரிக்க வேண்டும்.
செயல்படும் ஜீவியம், ஆனந்தம், சக்தி, பொருள் அது.
விலக்க முடியாத பிரபஞ்சம் பின்னணியிலுள்ளது.
அப்பிரபஞ்சத்தினின்று அது தன் சத்தியத்தையும், சக்தியையும், ஆனந்தத்தையும் பெறுகிறது.
ஒருமையின் பன்மையை அது பிரிவினையாகத் தோன்றும்படிப் பிரிக்க வேண்டும்.
எல்லா உறவுகளையும் இக்கண்ணோட்டத்தில் காண்கிறோம்.
ஒன்றுக்கு மற்றது போட்டியாகிறது.
அது மீண்டும் சந்தித்து, இணைய வேண்டும்.
பிரிவினையின் ஆனந்தம் ஏற்பட வேண்டும்.
தொடர்பின் ஆனந்தத்தைப் பிரிவினையின் ஆனந்தமாக்க வேண்டும்.
நிலையான ஐக்கியம் நித்தியமாக இருக்கும்பொழுது அதைச் செய்ய வேண்டும்.
அதுவே நிலையான கலப்பு.
ஏகனை அது ஒரு தனிமனிதன்போல மற்ற தனிமனிதர்களுடன் உறவாடச் செய்ய வேண்டும்.
இதை எப்பொழுதும் அவனுடைய ஐக்கியத்தில் செய்ய வேண்டும்.
இதுவே உலகம் உள்ள உண்மை.
மனம் பிரக்ஞாவின் முடிவான செயல்.

இத்தனையும் அதனால் நடக்கிறது.
நாம் அறியாமைஎன்பது புதியதாக எதையும் உற்பத்திச் செய்யவில்லை.
அது முழுமையான பொய்யில்லை.
அது சத்தியத்தைத் தவறாகப் புரிந்து கொள்வது.
மனத்தின் அறியாமை ஞானத்திலிருந்து விலகியது.
தன் ஞானத்தின் உற்பத்தி ஸ்தாபனத்திலிருந்து அது பிரிந்துவிட்டது.

It gives a false rigidity and a mistaken appearance.
It is of the opposition and conflict to the play.
It is the harmonious play of the Supreme Truth.
It is a Truth in universal manifestation.

There is a fundamental error of Mind. Page No.171
It is the fall from this self-knowledge. Para No.18
By self-knowledge the individual soul conceives of its individuality.
It takes it as a separate fact.
It is really a form of Oneness.
It is the centre of the universe.
Indeed it is really one concentration of the universal.
It is the original error.
It has many particular ignorances.
It has limitations too.
They are contingent results.
It views the flux of things only as it flows.
It flows upon and through itself.
It mistakes the limitation of being as a limitation of consciousness.
It results in limitation of knowledge.
It also becomes a limitation of conscious force and will.
And therefore it becomes a limitation of power.
It follows as a limitation of self-enjoyment, and therefore of delight.
It is conscious of things.
It knows them only as they present themselves.
It presents to its individuality.
Therefore it falls into an ignorance of the rest.
Thereby it falls into erroneous conception.



ஒரு தவறான தோற்றம், பொய்யான கடுமை தெரிகிறது.
அது எதிர்ப்பு, லீலைக்கு எதிரானது.
உச்சகட்ட சத்தியத்தினின்று எழுந்த சுமுகமான லீலை இது.
சத்தியம் பிரபஞ்சத்தில் வெளிப்படுவதே இது.

இது மனம் செய்யும் அடிப்படையான தவறு.
சுய-ஞானத்திலிருந்து தவறுவதாகும்.
ஜீவாத்மா சுய ஞானத்தால் தனித்தன்மை பெறுகிறது.

தன்னை அது தனித்த விஷயமாகக் கொள்கிறது.
அதுவும் ஒருமையின் ரூபம்.
அது பிரபஞ்சமையம்.
பிரபஞ்சம் ஒரு வகையாகச் செறிந்து செயல்படுவது அது.
இது ஆரம்பத் தவறு.
இதற்குக் குறிப்பான பல அறியாமைகள் உள.
இதற்கும் அளவுண்டு.
அவை சந்தர்ப்பத்தால் எழுந்த பலன்கள்.
நிகழ்ச்சிகளின் நிரவலை அது ஓட்டத்தில் காண்கிறது.
அது தன்மீதும், தன்னூடேயும் ஓடுகிறது.
ஜீவனுக்குள்ள அளவை ஜீவியத்தின் அளவாகக் கொள்கிறது.

இது ஞானத்திற்குத் தடை.
சித்-சக்திக்கும் இது தடையாகும்.
அதனால் இது அதிகாரத்திற்குத் தடையாகிறது.
சுய ஆனந்தத்தடையாகத் தொடரும்பொழுது ஆனந்தம் சுருங்குகிறது.

அது விஷயத்தை விழிப்பாகக் காண்கிறது.
அவை எப்படி வருகின்றனவோ அப்படியே விஷயத்தை மனம் அறிகிறது.
மனத்தின் தனித்தன்மை அதை வரவேற்கிறது.
எனவே மற்றவை அனைத்தையும் அறியமுடியாமல் போகிறது.
ஆகவே ஒரு தவறான கருத்தை அது ஏற்க வேண்டியுள்ளது.

It is true even of that which it seems to know.
All beings are interdependent.
The knowledge of the whole is the knowledge of the essence.
It is necessary for the right knowledge of the past.
Hence there is an element of error in all human knowledge.
Similarly our will is ignorant of the rest of the all-will.

It must fall into error of working.
It generates a greater or less degree of incapacity and impotence.
The soul has self-delight and has delight of things.
It ignores the all-bliss.
By defect of will and knowledge it is unable to master its world.
It must fall into incapacity of possessive delight.
And therefore it suffers.
Self-ignorance is the root of all perversity.
That perversity is fortified by self-limitation.

It is the egoism of self-ignorance. Page No.172
All ignorance and all perversity is only distortion of truth. Para No.19
It is not the play of absolute falsehood.
Mind views things in the division it makes.
It is its result, *avidyayam antare*.
It should view itself and its divisions as instrumentation.
The truth is Sachchidananda.
It is a phenomenon of the play of the truth.
It can get back to the truth from which it fell.
Then it becomes again the final action of the Truth-Consciousness



மனம் அறிந்தவற்றிலும் அது உண்மையெனத் தெரிகிறது.
எல்லா ஜீவன்களும் ஒன்றோடொன்று பின்னிக் கொண்டுள்ளன.
முழுமையை அறிவது சாரத்தையறிவது.
கடந்த காலத்தைச் சரியாக அறிய இது அவசியம்.
எல்லா மனித ஞானத்திலும் எளிய தவறு கலந்துள்ளது.
அதேபோல் இறைவன் திருவுள்ளம் ஏற்கும் மற்ற கடமைகளை நாம் அறிவதில்லை.
செயலில் தவறு எழும்.
இயலாமை, முடியாமை ஏதோ ஓரளவில் எழுகிறது.

ஆத்மாவுக்கு சுய ஆனந்தமுண்டு. பொருள்களில் ஆனந்தமுண்டு.
மனம் ஆனந்தமயமான நிலையைக் காண்பதில்லை.
ஞானமும், உறுதியும் குறையாயிருப்பதால் உலகைஆள முடிவதில்லை.

பொருள்களை உடமையாக்கிக்கொள்வது இயலாமையை எழுப்பும்.
எனவே வேதனை.
தன்னையறியாததால் குதர்க்கம் எழுகிறது.
அக்குதர்க்கத்திற்கு அளவீடு துணை.

அது சுய அறியாமையின் அகந்தை.
அறியாமை, குதர்க்கம்என்பவை சத்தியம் சிதறுவது.

அவை முழுப்பொய்யின் லீலையில்லை.
தான் பிரிப்பதன்மூலம் மனம் காண்கிறது.
அது பலன் *அவித்யாயம் அந்தரே.*
தன்னையும், தன் பகுதிகளையும் மனம் கருவியாகக் கருதவேண்டும்.
சத்தியம்என்பது சச்சிதானந்தம்.
இது சத்தியத்தின் தோற்றத்தின் லீலை.
எங்கிருந்து தவறி விழுந்ததோ அந்த சத்தியத்தை மீண்டும் அது பெறும்.
அப்பொழுது அது சத்தியஜீவியத்தின் முடிவான செயலாகும்.

It is its apprehensive operation.
It helps to create a relation in that light and power.
It will be the relation of Truth.
It won't be of perversity.
They will be the straight things and not the crooked ones.
The Vedas call it crooked.
Truth is of divine being with its self-possessive consciousness.

Its will and delight will move harmoniously in itself.
This is a warped and zigzag movement of mind and life.
The soul creates contortions by the struggle once it grows oblivious of its true being.
To resolve back all error into the original truth, our truth and error must be converted into truth.
All incapacity must become strength.
All suffering must be changed into delight.
All death goes into immortality.
Our life and death are in pain to achieve it.

*The end.*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

வேதனையால் துரோகத்தின்மூலம் விஸ்வாசம் எழுகிறது (பத்ரகிரியின் மனைவி). இந்திரனை விரும்பிய அகல்யா கற்புக்கரசியாக, கல்லாக மாறினாள். ஆயிரமாண்டு அனுபவித்தபின் 5 கணவரைப் பெற்று திரௌபதி பத்தினியானாள். தாரை சந்திரனுக்குக் குழந்தை பெற்றாள்.



அதுவே பிரக்ஞாவின் செயல்.
ஒளியிலும் சக்தியிலும் ஒரு தொடர்பை ஏற்படுத்த அது உதவும்.
அது சத்தியத்தின் உறவு.
அது குதர்க்கமாகாது.
அவை நேரானவை, கோணலானவையல்ல.
வேதம் அதைக் கோணல் என்கிறது.
சத்தியம் இறைவனது ஜீவன். அது பிரம்மத்தை சொந்தமாக்கிக் கொள்ளும் ஜீவியம்.
அதன் செயலும், ஆனந்தமும் சுமுகமாக உலகில் செயல்படும்.
இது மனமும் வாழ்வும் வளைந்துவரும் சிதைந்த வாழ்வு.
தன் ஜீவனை மறந்தால் ஆத்மா தன் போராட்டத்தால் சிதைவுகளை உற்பத்தி செய்யும்.
எல்லாத் தவறுகளும் அதிசத்தியமாக நம் மெய்யும் பொய்யும் சத்தியமாக வேண்டும்.
இயலாமை எல்லாம் வலிமையாக வேண்டும்.
வேதனையெல்லாம் ஆனந்தமாக வேண்டும்.
மரணம் அமர வாழ்வாக வேண்டும்.
நம் வாழ்வும் மரணமும் அதையடைய வலிந்து முயல்கின்றன.

*முற்றும்.*

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

தத்துவத்தை அறிவால் அனுபவித்தாலும், நடைமுறையில் வாழ்க்கை அனுபவிப்பதைப் பெற்றாலும், அதன் சாரம் ஞானம். ஆன்மா இந்த ஞானத்தில் பிரதிபலித்தால் விவேகம் எழும்.

***விவேகம்என்பது ஆன்மாவின் தத்துவஞானம்.***

# ஆன்மாவிலிருந்து செயல்பட்டால்

என். அசோகன்

ஆன்மாவிலிருந்து செயல்பட வேண்டுமென்றால், அறிவிலிருந்து செயல்படுவதோ, உணர்வின் அடிப்படையில் எழுந்த அபிப்பிராயங்களின் படியோ மற்றும் உடல் ரீதியான பழக்கவழக்கங்களின்படியோ செயல்படக் கூடாதுஎன்பது அவசியமாகிறது. இது அவசியம் என்றாலும், ஆன்மாவைச் செயல்பட வைப்பதற்கு இதுமட்டும் போதாது. உள்ளிருந்து ஓர் எழுச்சி அல்லது வெளியிலிருந்து வரும் நிர்ப்பந்தம் தேவைப்படுகிறது. இரண்டும் இருந்தால் நல்லது. ஏதேனும் ஒன்றிருந்தால்கூட ஆன்மா உடனடியாகச் செயல்பட்டு, விளைவுகளையும் உடனடியாகத் தருகிறது. குறைந்தபட்சம் நாம் விரும்புகின்ற நல்ல பலன்கள் நம்முடைய சூழலுக்குள் நுழைய ஆரம்பித்துவிடுகின்றன.

டாம் கூத் (Tom Gooth) என்ற அமெரிக்கர் உலகெங்கும் பிரயாணம் செய்யும் பழக்கம் கொண்டவராக இருந்தார். ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள ஏழை மக்களுக்கு உதவக்கூடிய பொருளாதாரத் திட்டங்களில் அக்கறை கொண்டவராக இருந்தார். இந்நாடுகளில் பரவலாக இருக்கும் ஏழ்மையை அகற்றுவதற்காக எல்லோரும் பயன்படுத்தக்கூடிய ஓர் எளிமையான தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிப்பதில் ஆர்வமாக இருந்தார். சைக்கிள்ரிக்ஷாவில் ஓர் என்ஜினைப் (engine) பொருத்துவதற்குத் தீவிர முயற்சி எடுத்தார். இதன்பொருட்டு கோல்கத்தாவில் நிறைய நாள்கள் தங்கியிருந்தார். ஒரு பக்கம் இந்த ஆர்வம் இருக்க, இன்னொரு பக்கம் ஆன்மீகத்திலும் தீவிர ஆர்வம் கொண்டிருந்தார். எந்நாட்டிற்குச் சென்றாலும் அங்குள்ள ஆன்மீக முக்கியத்துவம் பொருந்திய இடங்களைப் பார்வையிடுவார். பல்வேறு யோகங்களையும் பயின்று வைத்திருந்தார்.

ஒரு சமயம் மெக்ஸிகோ சென்றிருந்த பொழுது தம்முடைய வாக்ஸ்வேகன் (Volkswagen) காரில் பயணம் செய்தார். ஒரு நாள் மதியம் ஓர் ஓட்டலில் சாப்பிட்டுவிட்டு காரை ஓட்டிக் கொண்டு



போனபோது தம்முடைய பர்ஸ் மற்றும் பாஸ்போர்ட் வைத்திருந்த பை வழக்கமான இடத்தில் இல்லைஎன்பதைக் கண்டார். உடனே வண்டியை நிறுத்தித் தேடினார். தான் சாப்பிட்ட ஓட்டலில் இருந்து பல மைல்கள் அப்பால் வந்துவிட்டிருந்தார். எனவே, மீண்டும் ஓட்டலுக்குப் போக வேண்டியதாயிற்று. வழியில் எங்கெல்லாம் நிறுத்தினாரோ அங்கெல்லாம் மீண்டும் நிறுத்தித் தேடினார். ஆனால் பலனில்லை. அந்நேரம் உண்மையிலேயே எல்லா நம்பிக்கைகளையும் இழந்த நேரம். அவருடைய முயற்சியின் முடிவுக்கு வந்திருந்தார். இத்தகைய சூழ்நிலையில் தாம் செய்யக்கூடிய எல்லா முயற்சிகளையும் நினைவுபடுத்திப் பார்த்தார். இருந்தாலும் எதன் வழியாகவும் நிவாரணம் கிடைக்கவில்லை. திடீரென்று, ‘‘மிகவும் இக்கட்டான நேரம்தான் என்னைக் கூப்பிட உகந்த நேரம்’’ என்று ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னை கூறியிருந்தது அவருக்கு நினைவுக்கு வந்தது. உடனே பத்மாசனமிட்டு சாலையிலேயே அமர்ந்து அன்னையை அழைத்தார். மனத்திலிருந்த பாரம் நீங்கியதை உணர்ந்தார். மீண்டும் வண்டியை எடுக்க நினைத்தார். வண்டியை எடுப்பதற்கு முன்னர் சாலையோரமாக இருந்த புதரின் மேல் தன்னுடைய பை கிடப்பதைக் கண்டார். உள்ளிருந்து ஒரு நன்றியுணர்வு பெருக்கெடுத்ததேயொழிய வேறு எந்தக் கேள்வியும் எழவில்லை. அவருடைய உடம்பே புல்லரித்தது. ஆன்மா தவறுவதேயில்லை. ஏனென்றால் தோல்விஎன்பது அது அறியாத ஒன்று. இருந்தாலும் ஆன்மா எப்படி பலனைக் கொண்டு வருகிறது என்பதற்கான விளக்கம் எல்லோரும் வரவேற்கின்ற ஒன்றாகும்.

ஒருவன் திருடிவிட்டால், போலீஸ் எல்லா காவல் நிலையங்களுக்கும் செய்தி அளிப்பதால், திருடனைப் பிடிக்க முடிகிறது. போலீஸ் ஒரு சர்க்கார் ஸ்தாபனம். கிரெடிட் கார்டை நாம் மும்பையிலோ, சிங்கப்பூரிலோ கொடுத்தால், அதை ஏற்று, பொருள்களைக் கடைகள் விற்கின்றன. கிரெடிட் கார்ட் ஒரு வியாபார ஸ்தாபனம்போல் செயல்படுகிறதுஎன்பதை இது காட்டுகிறது. எல்லாம் வல்ல இறைவன் உலகெங்கும் பரவியுள்ள சூட்சும ஆன்மீக ஸ்தாபனம் என்பதாலும், அந்த ஸ்தாபனத்தின் கிளை நம்முள் ஆன்மாஎன்ற

உருவிலிருப்பதாலும், நாம் எந்த நேரமும் நம் உள்ளுறை ஆபீஸிலிருந்து இறைவன்என்ற ஸ்தாபனத்திற்குச் செய்தி அனுப்பலாம். காணாமற் போன பொருள் எங்கிருந்தாலும், எந்தக் கிளை ஆபீஸ் மூலமாகவும் இறைவன் செயல்படுகிறான்என்பதை நாம் காண்கிறோம். நாம் அறிவால் செயல்படுகிறோம். அதன் பலன் பெரியது. ஆத்மாவால் செயல்படக் கற்றுக் கொண்டால் நம் திறமைக்கு முடிவேயில்லை என்பது ஆன்மீக அனுபவம்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

ஆசையும், அபிப்பிராயமும் சேர்ந்து நோக்கமாகின்றது (attitude). ஆழ்ந்த நோக்கம் (motives) தன்னுள் எண்ணம், உணர்வு, செயல்திறன் ஆகியவற்றைக் கொண்டது.

*ஆசையை ஏற்கும் அபிப்பிராயம் நோக்கம்.*

## ஸ்ரீ அரவிந்த சுடர்

கொடுமை, கடுமை, பொறாமை, துரோகம், வெறுப்பு, அறிவால் ஏற்படும் உணர்வு, தவறான அபிப்பிராயம் ஆகியவை பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திற்கு அவசியமானவை. யோகமே இதுபோன்ற முயற்சியாகும். பரம்பொருளுக்குத் தேவையற்ற ஒன்றாகும்.

*மனிதனுக்குத் தேவைப்படும் கடுமையும் வெறுப்பும்*
*யோகத்திற்கும் தேவை, பரம்பொருளுக்கில்லை.*





## P.99 Makes yearn this life of flesh to intangible aims

### தசையான வாழ்வு தண்மையான இலட்சியத்தை நாடும்

- ✡ **அழியும் உடலை அழியா அமரத்துவத்துடன் இணைக்கிறது.**
- ✡ **ஜடம் இருளாகி மருண்ட மயக்கம்,**
- ✡ **பரமாத்ம ஜோதியை நோக்கிப் பாடுபடுகிறது.**
- ✡ **பூமிமட்டும் சிருஷ்டிக்கப்பட்டில்லை, பரமாத்மாவும் பூமியைச் சார்ந்ததே.**
- ✡ **எண்ணம் எழுகிறது, வாழ்வு ஆனந்தம் தேடுகிறது.**
- ✡ **பூமி தனித்திருந்தால் ஜட உருவம் மட்டுமிருக்கும்.**
- ✡ **ஜடமான லோகசக்தி வாழ்வை நடத்துகிறது.**
- ✡ **பொன்னான பூமிக்கு எதுவும் தேவையில்லை.**
- ✡ **மனிதனைப் பிறப்பித்தது, மனிதனுக்குப் பிடிபடவில்லை.**
- ✡ **உயர்ந்த நோக்கம் உள்ளுறை உலகில் நோக்கம்.**
- ✡ **உயரும் விதிக்கு உரிய சாவி அதுவே.**
- ✡ **தடித்த மரணத்தைத் தடிகொண்டு எழுப்புகிறது.**
- ✡ **ஆத்மவிழிப்பு ஜடமெனும் வீட்டில் பிறந்து வளர்கிறது.**
- ✡ **விழிப்பான லோகங்களின் ஜீவனுடைய அடையாளம்,**
- ✡ **அதன் சக்திகளும், தெய்வங்களும் புலனுக்குப் புலப்படா.**
- ✡ **சத்தியசெயல் அறிவின் அரணைக் கடந்தது.**
- ✡ **சொல்லொணா சத்தியத்தின் சொற்பெருக்கால் எழுந்தவை,**
- ✡ **அகவாழ்வின் அளவுகோலை நிர்ணயிக்கிறது.**
- ✡ **ஆத்மா வீடு திரும்பும் அற்புத அடிச்சுவடுகள்,**
- ✡ **பிறப்பெனும் புனிதம், ஆத்மாவின் அற்புத தீரம்.**

✡ **விடுதலையளிக்கும் ஏணியைக் கண்டோம்,**

✡ **இயற்கை தெய்வத்தை நாடும் இயல்பான படிகள்,**

✡ **மரணமழியும் திருஷ்டியின் மகிமையின் உஷார்.**

✡ **சிருஷ்டியில் பிரம்மம் ஜடத்துள் வந்து ஒளிந்த பாங்கு,**

✡ **பிரம்மம் புரண்டு பரந்து தாவிய பக்குவம்.**

✡ **ஆண்டவன் தன்னை விரும்பி அழித்த அற்புதம்,**

✡ **லோகமாதாவின் சிருஷ்டித் தியாகம்.**

✡ **மாதாவின் ஆத்மா மனிதனுடைய உடலாகி,**

✡ **வேதனையை விரும்பிஏற்றுப் பார்வையிழந்து,**

✡ **தன் அதிசயத்தைவிட்டு இறங்கிவரும் தெய்வம்.**

✡ **ஆயிரம் ரகங்களான நாமும் நம் உலகமும்,**

✡ **அழியும் வாழ்வில் பிரம்ம விக்ரஹம்.**

✡ **புவியெனும் துண்டு மிச்சமான துணுக்கு,**

✡ **பெருவெளியின் சக்தி பெருகிவரும் பாங்கு,**

✡ **மண்ணின் மயக்கம் வண்ண எழிலாகும் உறைவிடம்.**

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

செயல் பலநிலைகளிலுண்டு. அங்கு, திறமை பூரணமானால் செயல் பூர்த்தியாகும். திறனாலான வாழ்வின் அமைப்பு (physical organisation), சக்தியாலான உணர்வின் அமைப்பு (vital organisation), எண்ணத்தாலான மனத்தின் அமைப்பு (mental organisation), ஆன்மீகக் கருத்தின் (Real Idea) சத்தியஜீவிய அமைப்புப் போன்றவையாகும்.

***செயல் தன்னைப் பலநிலைகளில் பூர்த்தி செய்துகொள்ளும்.***



# யோக வாழ்க்கை விளக்கம் V

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

**951) திறமைகளை முறையோடு பெற்றவன் முடிவுகளை (decision) முறைப்படுத்த முன்வந்தால், அது முடிந்து செறிவடையும் தருணம் உடலுழைப்பிலிருந்து மனத்தின் திறனுக்கு நிலையாக வருவான்.**

***செயலைப் பூர்த்தி செய்தால் முடிவு எழும்.***
***வாழ்நாள் முழுவதும் உழைத்துப் பெறுவதை ஒரு முடிவு தரும்.***

மக்கின்ஸி உலகப் புகழ் பெற்ற மானேஜ்மெண்ட் நிறுவனம். அவர்கள் இந்தியாவின் இன்றைய நிலையை ஆராய்ந்து கொள்கை அளவில் சில மாறுதல்கள் செய்தால் இந்தியா இரண்டு லட்சம் கோடி ரூபாயை உபரியாகப்பெறும் என்றனர். இன்றைய பட்ஜெட் எட்டு லட்சம் கோடி.

✡ 300 ஆண்டுகளில் அமெரிக்கா, ஐரோப்பா 2000 ஆண்டில் சம்பாதித்ததைவிட 10 மடங்கு சம்பாதித்தனர். அதன் சூட்சுமம் உடல், உயிர், மனத்தில் உண்டு. மேற்சொன்னது எப்படி உழைப்பாளி அறிவாளியாகிறான்எனக் கூறுகிறது.

✡ மண்வெட்டி எடுத்துக் கொத்துபவன் உழைப்பாளி, கல்லூரிப் பேராசிரியர் அறிவாளி. நான் எழுதுவது அவர்களைப் பற்றியன்று.

மூட்டை தூக்குபவன் உழைப்பாளி. இன்று அவன் ஒரு நாளைக்கு 300 ரூபாய் சம்பாதிக்கிறான்.

கோர்ட்டில் வாதாடும் வக்கீல் அறிவால் சம்பாதிக்கிறார். ஒரு நாளைக்கு அவர் 30,000 ரூபாய் பெறுகிறார்.

*உழைப்பாளி அறிவாளியாவது மேற்கூறிய முறை. 300 ரூபாய் சம்பாதிக்கும் கூலிக்காரன் கோர்ட்டில் வக்கீலாக முடியாது. அவன் அவனளவில் அறிவால் உழைத்தால், 30,000 ரூபாய்*

*சம்பாதிக்கலாம். அமெரிக்கர் அதைச் செய்தனர்.*

- "100 ரூபாய்" அன்பர் பெறலாம்என நான் நம்புகிறேன்.
- "100 ரூபாய்" என்பது 100 கோடி ரூபாய். வக்கீல் உழைப்பு அறிவின் உழைப்பு.
- அன்பர் பெறுவது ஆன்மாவின் உழைப்பு, நிச்சயம் பலிக்கும்.
- மக்கின்ஸி நாட்டளவில் அதை எப்படிச்செய்வது என்கிறார்கள்.

✡ மூட்டை தூக்க எல்லோராலும் முடியாது. அதற்குத் திறமை தேவை, சூட்சுமம் தேவை. திறமையற்றவனால் அதைச் செய்ய முடியாது. சிலரால்தான் முடியும். அதை லாவகம்என்று கூறுவார்கள். லாவகமிருந்தால் மூட்டை தூக்க முடியும். 10 மூட்டை தூக்கியவுடன் களைத்துவிடும். லாவகத்துடன் சூட்சுமம் இருந்தால் 30 மூட்டை தூக்கலாம்.

மூட்டை தூக்குபவனால் 10 பேரைச் சேர்த்து வேலை வாங்க முடியாது. அதற்குப் பழகத் தெரிய வேண்டும். 10 பேர் அவனுக்குப் பணிய வேண்டும். அது மூட்டை தூக்குவதைவிடச் சிரமம். அது வேறு வகையான திறமை, உயர்ந்த திறமை.

வக்கீல் பேசுவது அதைவிட உயர்ந்தது. இது மனத்தின் திறமை. அறிவு தேவை, விளக்கம் கூற அறிவு தேவை.

முடிவு எடுக்க மனஉறுதி தேவை. மனஉறுதியுள்ளவன் தொழிலதிபனாவான்.

*மூட்டை தூக்கும் உடலின் சக்தியை பலரைக் கட்டுப்படுத்தும் உணர்வின் சக்தியாக உயர்த்த முடியும். அதை விளக்கம் தரும் அறிவாகவும், முடிவு எடுக்கும் மனஉறுதியாகவும் மாற்ற முடியும்.*

உழைப்பால் உயர்ந்த உத்தமர் பல ஆயிரம் கோடி சம்பாதித்தவர் பலருண்டு.

அவர்கள் எல்லாம் இதைச் செய்தவர்கள்.

- மனஉறுதி அறிவின்செயல் மனத்தில் வெளிப்படுவது.
- மனம், உறுதி பெற்றபின் அதைப் பயன்படுத்தாமல் அமைதியாக இருப்பது ஆன்மீகசக்தி.



- ஆன்மீகசக்தி பெற்றவர் சாது, தபஸ்வி, முனி, ரிஷி, யோகி. அவர் தொழில்செய்து சம்பாதிக்க வருவதில்லை.
- ரிஷியின் திறமையை ஆன்மாவில் பெற்று, தொழிலில் உள்ளவர் உண்டு. அவர்கள் அளவு கடந்து சம்பாதிக்கிறார்கள்.
- அன்பன் ரிஷியின் திறமையைச் சமர்ப்பணத்தால் பெறுகிறான். செயலைச் சமர்ப்பணம் செய்தால், அது ஆன்மீக உழைப்பாகும். அவ்வுழைப்பு "100 ரூபாய்" பெறும்.

மேற்சொன்ன செய்தி 951ஆம் நம்பர், முதல் வால்யூம் தினசரி செய்தியில் உள்ளது. இதை நான் 1990இல் எழுதினேன்.

இன்று அன்பர் தூய்மையான நல்லெண்ணத்தால் "100 ரூபாய்" சம்பாதிக்கலாம்எனக் கூறுகிறேன். அம்முறையைக் கூறும் செய்தியிது.

அழைப்பு அன்பர் அறிவது.

3 நாள், 5 நாள் அழைப்பு பல அன்பர்கள் அனுபவித்தது.

அழைப்பைப் பயின்று, அதை இடைவிடாமல் பின்னணியில் பெற்று, நாம் செய்யும் வேலையைச் சமர்ப்பணம் செய்தால் நான் கூறும் பலன் வரும்.

சமையல் செய்பவரும், தொழிலதிபரும், கிரிக்கெட் ஆட்டக்காரரும், நடிகரும் சமர்ப்பணத்தைப் பொருத்தவரை ஒன்றே.

சமையல் செய்பவர் "100 ரூபாய்" சம்பாதிக்கலாம்என்பது பொருத்தமற்றதாகத் தெரிகிறது.

நடிகர் பெருந்தொகை பெறலாம்என்பதை நம்ப முடியும்.

நம்ப முடியும் வகையில் அன்பர் இம்முயற்சியை மேற்கொள்ளலாம். பலன் உண்டு.

"100 ரூபாய்" சம்பாதிக்க 100 ஆண்டு தேவையில்லை. சமர்ப்பணம் இடைவிடாமலிருந்தால் சொற்பநாளில் பெறலாம்.

இது பலிப்பது அருளால். அருள் நம்பிக்கைமூலம் செயல்படுகிறது. நம்பிக்கை திறமைமூலம் செயல்படுகிறது. திறமைக்கு சக்தி வேண்டும். சக்தி எழ உழைப்பு வேண்டும். உழைப்பு உயர ஆர்வம் தேவை.

✡ ஆர்வமான, திறமையான உழைப்பு ஆயிரக்கணக்காக, இலட்சக்கணக்காக இப்பொழுது சம்பாதிக்கிறது.

✡ அதுவே சமர்ப்பணத்தால் செயல்பட்டால் இலட்சம், கோடியாகும்.

✡ எளிய மனிதனுக்கு நல்லெண்ணம் உண்டு. நாடி, நரம்பு நிரம்பி வழியும் நல்லெண்ணம் உண்டு.

✡ பிறர் மீதுள்ள நல்லெண்ணம் சமர்ப்பணத்திற்குச் சமம்.

அதுவே இப்பலனைப் பெற்றுத் தரும்.

❀ ❀ ❀

**952) பக்தர் அடிக்கடி பெறும் திடீர் உயர்வின் இரகஸ்யம் இதுவே. சத்தியஜீவியசக்தியை அன்னை அவர்கட்கு அளிக்கிறார். அதற்குரிய செயல்திறனை பக்தர்களால் பெறமுடிவதில்லை. அதை எட்ட மேதையின் எண்ணம், வீரனின் செயல், சிகரமான கருத்து, அற்புதத்தை அன்றாட நிகழ்ச்சியாக்கும் பிரார்த்தனை உதவும். அவை மனிதனை சத்தியஜீவியத்துடன் இணைக்கும்.**

***முறையை முறையாகப் பூர்த்திசெய்வது அற்புதத்தை அன்றாட நிகழ்ச்சியாக்கும்.***

மனிதனுடைய நிலைகள்:

1. பிழைக்க முடியாதவன், பிழைக்கத் தெரியாதவன்.
2. குடும்பத்தில் ஒருவராக இருந்து, குடும்பத்தால் உயிர் வாழ்பவன்.
3. ஊர் தரும் ஆதரவால் பிழைக்கும் குடும்பத்தை உறுதியாய் பிடித்திருப்பவன்.
4. ஏதோ ஒரு திறமையால் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருப்பவன்.
5. ஒரு நல்லெண்ணத்தால் வாழ்க்கை ஓடும் மனிதன்.
6. ஏதோ ஒரு நேரம் வரும்உதவியால் மற்ற நேரத்தை நடத்துபவன்.
7. உயிர் வாழ உழைக்க முடிந்தவன்.



8. தகப்பனார் தலைமுறையை ஒருபடி உயர்த்துபவன்.
9. ஆயுள் முடியும் நேரம் ஊரில் தலைமையை எட்டுபவன்.
10. ஆரம்பத்திலேயே ஆர்ப்பாட்டமாக முன்னுக்கு வருபவன்.
11. தன் குடும்பத்துடன் நகரம்போய் வாழ்பவன்.
12. தன்னையும், தன் குடும்பத்தையும், ஊரையும் உயர்த்துபவன்.
13. சிறந்த தலைமை நாட்டுக்குப் பயன்படுவது.
14. உத்தமன்.
15. ஆன்றவிந்து அடங்கிய சான்றோன்.

**எந்த நிலையிலிருந்தாலும் அன்னையிடம் வந்தால் பல கட்டங்களை அன்பன் தாண்டுவான்.**

உழைப்பாளி அறிவாளியாகி வாழ்வில் உயர்பவனை முன் செய்தியில் கண்டோம். அப்படிப்பட்டவன் அன்பனானால் அவன் அறிவு, விவேகம், வீரச்செயல், தவம், அற்புதம் செய்யும்.

✡ அன்னைச் சூழல் வாழ்வில் வாய்ப்பு.

✡ அன்பனின் செயல் கருவி.

✡ உயர்ந்த செயலுக்குப் பலன் அற்புதம்.

✡ உழைப்பவன் உடலால் உழைப்பதை அறிவால் உழைக்க மாற்ற முடியுமானால், அதனினின்று ஆன்மாவால் வாழ்வில் உழைக்க முடியுமானால்,

❀ க்ஷணத்தில் வாழ்வு மாறும்.

பிரச்சினை மறையும். மறைந்து, மாறி வாய்ப்பாகும்.

நாம் தேடிப்போனவர் நம்மைத்தேடி வருவார்கள்.

நாம் முயன்று முடித்த காரியங்கள் தாமே முடிக்க முயல்வதைக் காணலாம்.

உழைப்பு அறிவானால், அறிவு ஆன்மாவானால், செயல் வேகமிழந்து அமைதியுறும்.

அமைதியான செயல் அதிவேகமாக நடக்கும்.

செயலுக்கு ஜீவன் உண்டு.

ஜீவனுக்கு ஆன்மா உண்டு.

அந்த ஜீவன் விழித்தெழும்.

விழித்தெழுந்த ஜீவன் அறிவையும், ஆன்மாவையும் வெளிப்படுத்தும்.

உழைப்பு உயிருக்கு மாறினால், சோர்வு நீங்கிச் சுகமாகும்.

அறிவே உழைத்தால், வாழ்வு பளிச்சென மாறும்.

ஆன்மா வாழ்வில் விழித்தால், எல்லாம் தானே கூடிவரும்.

ஆன்மா அறிவில் விழித்தால், புரியாதது இருக்காது.

ஆன்மா, வளரும்ஆன்மாவானால், செயல் அற்புதமாவது.

வளரும்ஆன்மா, வாழ்வின்வண்ணம்.

உழைப்பவன் கூலிக்காரன்.

கூலிக்காரன் குத்தகைக்காரனாவது, உயிர் பெறுவது.

குத்தகைக்காரன் சொந்தமாக நிலம்பெறுவது, விளக்கம் பெறுவது.

நல்லெண்ணம் எழுந்தால் நாலுபேர் சேர்ந்து அவனைத் தலைவனாக்குவார்கள்.

நல்லெண்ணம் தொழிலில் எழுந்தால், தொழிலதிபன் தேடி வருவான்.

நாலுபேர் நல்லெண்ணம் நம் வாழ்வில் செயல்பட்டால், நாட்டின்பெருமை நம்மை நாடிவரும்.

மனம் நாட்டைப் பெருமையாக ஏற்றால், நாடு நம்மைஏற்கும்.

உண்மை, உயர்வு, உன்னதம், உத்தமம் உள்ளவை.

❀ ❀ ❀

*தொடரும்......*

## ஜீவிய மணி

**தோற்றத்தில் வெளிப்படும் விஷயம் ஜீவனுள்ளது.**



# தமிழ்நாட்டுப் பழமொழிகளும் ஸ்ரீ அரவிந்தமும்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

கர்மயோகி

86. *கேடு காலத்தினால் விளையும் பயன்கள் நன்மையே தரும்.*

✡ **சூழலில் காலம் கேட்டிற்குக் கேடு செய்யும்.**

87. *பார்வையிலிருந்து விலகினால் மனத்திலிருந்தும் விலகுவாய்.*

✡ **பார்வையினின்று கேடு விலகினால், அது மறையும்.**

88. *புதுத் துடைப்பம் நன்கு பெருக்கும்.*

✡ **புதுமைச்சிறப்பு வளர்வது ஆன்மவிழிப்பின் புதுமை.**

89. *அவசரத்தில் ஏறுபவர்கள் திடீரென வீழ்வர்.*

✡ **சமர்ப்பணமான அவசரம் பொறுமை.**

90. *ஆரம்பம் எப்படியோ முடிவும் அப்படியே.*

✡ **1) முடிவைக் காட்டும் ஆரம்பம்.**

**2) அன்னைநினைவு ஆரம்பத்தில் முடிவை (நிர்ணயிக்கும்) முடிவு செய்யும்.**

*தொடரும்....*

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

**பகுதி, முழுமையைவிடப் பெரியது. முழுமையிலிருந்து முழுமையை எடுத்தால் மிஞ்சுவது முழுமைஎன்பது ஜடத்திலும் பொருந்தும்.**

# ஆன்மீக மற்றும் மனோதத்துவ உண்மைகள்

*(சென்ற இதழின் தொடர்ச்சி....)*

என். அசோகன்

441. பிள்ளைகளை முறையாக வழிநடத்தி அவர்களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் பொறுப்பு பெற்றோருக்கு இருக்கிறது. ஆனால் பிள்ளைகள், முறையைவிட தங்களுக்கு எது பிடிக்குமோ அதைத்தான் நாடுகிறார்கள். பெற்றோர்கள் வலியுறுத்தும் முறையும் பிள்ளைகள் தேடும் சந்தோஷமும் ஒத்து வாராதபொழுது தகராறு எழுகிறது. தம் பேச்சைப் பிள்ளை கேட்காத பொழுது பெற்றவர்களே பிள்ளை விஷயத்தில் நெகட்டிவ்ஆக மாறுவதும் உண்டு.

இத்தகைய சூழ்நிலைகளில் எது சரிஎன்று சொல்வது கடினம். இரண்டு பக்கங்களிலும் உண்மையும் இருக்கிறது, தவறும் இருக்கிறது. சுமுகத்தைக் கருதினால் பெற்றவர்கள் சரிஎன்று படுகிறது. சுதந்திரத்தைக் கருதினால் பிள்ளைகள் சரிஎன்று படுகிறது. இந்த இரண்டு எதிர்முனைகளுக்கு நடுவேதான் உண்மை இருக்கிறது.

442. குடும்பகௌரவம், ஜாதிப்பற்றுபோன்ற விஷயங்கள் பெற்றோர்களை பிள்ளைகளின் நடவடிக்கைகளை கண்காணிக்க வைக்கின்றன. காதலில் ஈடுபட்டு கலப்புத்திருமணம் செய்து கொள்ளும் பிள்ளைகள் குடும்பகௌரவத்தை பாதிப்பதாக பெற்றோர் நினைப்பதால் அப்படிப்பட்ட பிள்ளைகளோடு விரோதம் பாராட்டுவதும் உண்டு. விரோதம் வாழ்நாள் முழுக்க நீடிப்பதும் உண்டு.

443. பல இந்திய குடும்பங்களில் ஆண்பிள்ளைகளுக்கு கிடைக்கும் கவனம் பெண் பிள்ளைகளுக்கு கிடைப்பதில்லை. பெண் பிள்ளைகளின் திருமணச்செலவை பெற்றோர் ஒரு பாரமாக நினைப்பது இதற்கு ஒரு காரணமாக அமையலாம்.



444. ஒரு குடும்பத்தில் தாயார் முதன்மையாக இருக்கிறார்என்றால், ஒன்று தகப்பனார் அவருடைய வேலையில் மூழ்கியவராக இருக்க வேண்டும் அல்லது சரியான வேலை மற்றும் வருமானம் இல்லாமல் பொறுப்பற்றவராக இருக்க வேண்டும்.

445. இக்காலத்தில் வயதில் பெரியவர்களுக்குச் செலுத்தும் மரியாதை என்பது மிகவும் மேலோட்டமாகிவிட்டது. வாழ்க்கை சீராகவும், நிதானமாகவும் போய்க்கொண்டிருந்த நாட்களில் தாத்தா, பாட்டி போன்றவர்களுக்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது.

ஆனால், இப்பொழுது வாழ்க்கைப் பாணியின் வேகம் அதிகரித்து விட்டது. கூட்டுக் குடும்பம் போய் அவரவர் தனித்து வாழ்கின்றனர். வேகம் அதிகரித்துள்ள அளவிற்கு மரியாதையும் மேலோட்டமாகி விட்டதில் ஆச்சர்யம் இல்லை.

446. பண்பு நிறைந்த குடும்பங்களில் பணம் மற்றும் சொத்து விஷயமாகத் தகராறு எழுவதில்லை. இப்படி ஒரு குடும்பத்தில் தகராறு எழுகிறது என்றால், அக்குடும்பம் பண்பு குறைவான குடும்பம்என்று அர்த்தம் ஆகும்.

447. விருந்தாளிகள் வந்திருக்கும்பொழுது வீட்டிலுள்ள அனைவரும் பக்குவமாக நடந்து கொள்வது பண்பின் எடுத்துக்காட்டாக அமையாது. விருந்தாளிகள் இல்லாத நேரத்தில் வீட்டிலுள்ளவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்என்பதே பண்பின் உண்மையான எடுத்துக்காட்டாகும்.

448. வாழ்க்கை நிதானமாக ஓடிக்கொண்டிருந்த நாட்களில் விருந்தாளிகள் சொல்லாமல் வருவதுண்டு. நெடுநாட்கள் தங்கிவிட்டு அவர்கள் இஷ்டப்பட்ட நாட்களில் திரும்பிப் போவதும் உண்டு. ஆனால் இப்பொழுது வாழ்க்கையின் வேகம் அதிகரித்து விட்டது. இதன் விளைவாக விருந்தோம்பலும் பாதிக்கப்பட்டுவிட்டது. இப்பொழுதெல்லாம் விருந்தாளிகள் முன்கூட்டியே வருவதாக தெரிவிக்க வேண்டியுள்ளது. ஓரிரு நாட்களுக்குமேல் தங்க முடியாமல் திரும்பவும் வேண்டியுள்ளது.

449. மனைவியிடம் சொல்லாமல் வீட்டிற்கு விருந்தினர்களை அழைத்து

வரும் இந்திய ஆண்கள் பலபேர் இருப்பது அவர்களுக்கு இன்னமும் சுதந்திரம் இருப்பதைக் காட்டுகிறது. மேலைநாட்டு ஆண்கள் அந்த சுதந்திரத்தை எப்பொழுதோ இழந்துவிட்டார்கள்.

450. கணவனும் மனைவியும் இருவரும் மனம் ஒத்து மகிழ்ச்சிகரமாக குடும்பம் நடத்துவது அரிது. பெரும்பாலான தம்பதிகள் ஒருவர் மேல் ஒருவர் குறை சொல்லிக்கொண்டும், அட்ஜஸ்மெண்ட் பண்ணிக்கொண்டும்தான் குடும்பம் நடத்துகிறார்கள்.

451. தம்பதியரிடையே சமநிலை நிலவ வேண்டும்என்று பேச்சு இருந்தாலும், உண்மையில் பார்த்தால் யாரேனும் ஒருவர் ஆதிக்கம் செலுத்திக்கொண்டும், அடுத்தவர் பணிந்துகொண்டும் இருப்பர்.

452. திருமணத்தின்மூலம் பெண்கள் முக்கியமாக நாடுவது ஆதரவும் பாதுகாப்பும்தான். அன்பு பரிமாற்றம்என்பது அவர்களுக்கு இரண்டாம்பட்சம்தான்.

உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு உடலுறவு இன்பம்தான் முக்கியமாக திருமணத்தில் அவர்கள் தேடுவது. நன்றாக வளர்ந்துள்ள உணர்வு மையத்தைக் கொண்டவர்கள்தான் உடலுறவையும் தாண்டி அன்பு பரிமாற்றத்தை முக்கியமாகக் கருதுவார்கள்.

453. ஒவ்வோர் ஆணும் பெண்ணும் தம்முடைய திருமணம்மட்டும் விசேஷமாக இருக்கும்என்று எதிர்பார்க்கிறார்கள். ஆனால் இந்த எதிர்பார்ப்புகள் விரைவிலேயே பொய்யாகிவிடுகின்றன. இருந்தாலும் தம்முடைய பெற்றோருடைய திருமணம் எப்படி இருக்கிறதுஎன்பதை ஒதுக்கிவைத்துவிட்டு ஒவ்வொரு இளைய தலைமுறையும் தம்முடைய திருமணத்தைப்பற்றி கனவுகளை வளர்த்துக் கொள்கிறார்கள்.

454. திருமணப் பேச்சுவார்த்தை நடக்கும்பொழுதும், ஆணும்பெண்ணும் பழகும்பொழுதும், திருமணம் கூடிவரும்வரையிலும் இரு பக்கத்தாரும் மிகவும் நல்ல முறையில் நடந்து கொள்வார்கள். அதன் பிறகுதான் சுயரூபமே வெளிவருகிறது. முன்பிருந்த போலித்தனம் போய் சுயரூபம் வெளிவரும்பொழுது சம்மந்தப்பட்டவர்களுக்கு



எல்லாம் அதிர்ச்சி வருகிறது.

455. இந்திய கணவன்மார்கள் பலபேர் தம்முடைய வரவு, செலவு விவரங்களை மனைவிமார்களுக்குத் தெரியாமல் ரகசியமாக வைத்திருப்பார்கள். இப்படி ரகசியமாக வைத்திருக்கும்பொழுது மனைவி தன் கட்டுப்பாட்டிற்குள் இருப்பதாக அவர்கள் நம்புகிறார்கள். இப்படியில்லாமல் இந்த விஷயங்களையெல்லாம் மனைவிமார்களிடம் பகிர்ந்து கொண்டால், மனைவிமேல் இருக்கும் கன்ட்ரோல் போய்விடும்என்று அஞ்சுகிறார்கள்.

456. இந்தியாவில் நடக்கின்ற திருமணங்கள் பெரும்பாலும் பணத்தையும் சமூகஅந்தஸ்தையும் மையமாக வைத்துதான் நடக்கின்றன. திருமணத்தின்மூலம் இரு உள்ளங்கள் இணைவதுஎன்பது மிகவும் அபூர்வமாகும்.

457. தம்பதியரிடையே தகராறு எழுவதற்குப் பலகாரணங்கள் இருக்கலாம். அடிக்கடி தகராறு நிகழ்கிறதென்றால், விழிப்புணர்வு குறைவாக உள்ளவர்கள் சண்டைமூலம் ஒரு தீவிரத்தை நாடுகிறார்கள்என்று அர்த்தமாகும்.

458. பெண்களுக்குத் தாய்மைஎன்பது உடல் அளவிலும், மனரீதியாகவும் ஒரு நிறைவைத் தருகிறது. ஆண்களுக்கு, தமக்குப் பிள்ளைகள் பிறப்பதன்மூலம் அவருடைய சந்ததி தொடர்கிறதுஎன்றாகிறது.

459. பெண்ணுரிமையைப் பற்றி எவ்வளவுதான் பேசினாலும் இந்தியப் பெண்கள் தலைமையும் மனோதிடமும் உள்ள கணவன்மார்கள் கிடைத்தால் சந்தோஷமாகப் பணிந்து போவார்கள்.

460. கணவன்மார்களை ஆதிக்கம் செய்யும் மனைவிமார்கள் தம்முடைய சொந்த பலத்தால் இப்படி ஆதிக்கம் செலுத்துவதில்லை. தம் மேல் உள்ள பிரியத்தால் அவர்கள் கட்டுண்டு இருக்கும்பொழுது அப்பிரியத்தை பலகீனமாக எடுத்துக்கொண்டு ஆதிக்கம் செலுத்துகிறார்கள்.

*தொடரும்.....*

❀ ❀ ❀

## அறிவின் விளக்கம் அவரவர் அறிந்த விளக்கம் (P.433)

இன்று உலகில் பிரபலமானவர் விஞ்ஞானிகள். அவர்களே உலகையாள்பவர்எனலாம். அவருடைய கருவி அறிவு (intellectuality). மேற்சொன்ன கருத்து *'அறிவால் அறிய முடியாது, அறிவு தனக்குத் தெரிந்ததையே எடுத்துக்கூறும். புதியதாக அறியும் திறன் அற்றது'* என்று கூறுகிறது. பல குருடர்கள் யானையை, காலிலும், துதிக்கையிலும், தந்தத்திலும், உடலிலும், வாலிலும் தொட்டுப் பார்த்து, யானை தூண் போல இருக்கிறது, மலைப்பாம்பு போன்றது, தடி போன்றது, சுவர் போன்றது, கயிறு போன்றதுஎன்றனர். எத்தனை முறை அவர்கள் செய்ததையே செய்தாலும், வேறு கூறப் போவதில்லை. முழுயானையை அவர்கள் எவராலும் பார்க்க முடியாதுஎன்ற கதை விஞ்ஞானியை விளக்கும். இது அறிவின் தன்மை என்கிறார் பகவான். *இதுநாள்வரை தன் அனுபவத்தை அறியுமே தவிர தன் வாழ்வானாலும் அதன் உண்மையை அறிய அறிவால் முடியாதுஎன்பது கருத்து. ஏற்பது சிரமம்.*

கிராமத்தில் பாங்க் மூலமாகக் கிணறு தோண்ட கடன் கொடுத்த பொழுது உள்ளூர் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டித் தலைவர் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தார். நான் அவரைக் கேட்டேன், "ஏன் பாங்க்கை எதிர்க்க வேண்டும்? உங்கள் சொஸைட்டியே இக்கடனைத் தரும் உரிமை பெற்றதாயிற்றே'' என்று. அவருக்கு அவர் சொஸைட்டியின் உரிமை தெரியவில்லை. பல ஆண்டுகளாகப் பயிர்க் கடன் தருகிறார்கள். எல்லா ஊர்களிலும் அதுவே வழக்கம். *வழக்கம் தெரிகிறது, உரிமை தெரியவில்லை.* வைஸ்சான்சலருக்கு தம் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கும் உரிமையுண்டு எனத் தெரியவில்லை. கன்ஸல்டண்ட் தொழிலில் நூற்றுக்கணக்கான சிறு தொழிலதிபர்கள், பெருந்தொழிலதிபர்களை நம் அன்பர்கள்



சந்தித்துள்ளனர். அவர்கட்கு அவர் தொழிலில் உள்ள வாய்ப்புகளை எடுத்துக் கூறினால், அவர்கள் நம்புவதில்லை. பொருளாதார நிபுணர்கள் அதுபோல் இன்று பணம் பெருகுவதை அறியவில்லை. இந்திய நாட்டில் அனைவருக்கும் வேலை பெறும் உரிமையைக் கொடுத்தபின்னும் மேல்நாடுகள் அது சாத்தியம் என அறியவில்லை.

✡ **அறிவு தெரிந்ததையே தெரிந்து கொள்ளும்.**

✡ **அறிவால் உள்ளதை ஊடாடிக் கண்டுபிடிக்கத் தெரியாது.**

✡ **அதற்கு ஞானம் தேவை.**

✡ **அறிவு ஞானமாகும் மார்க்கத்தை *The Life Divine*இல் பகவான் 100க்கு மேற்பட்ட இடங்களில் எடுத்துக் கூறுகிறார்.**

❀ ❀ ❀

### ஸ்ரீ அரவிந்த சுடர்

உடலில் பிரம்மம் சித்திப்பதுஎன்றால், உடல் பழக்கத்தாலும் உணர்வாலும் செயல்படுவதை விட வேண்டும். அதற்குமுன் உணர்வு, எண்ணம், எண்ணமற்ற அறிவு, ஜோதி, நேரடிஞானம், ஆனந்தம், ஜீவியம் ஆகியவற்றாலும் செயல்படுவதை நிறுத்த வேண்டும். முடிவை எட்டும்முன், உடல் சத்தியத்தையும் விட்டுக் கொடுக்க வேண்டும். சத்தியத்தால் செயல்பட மறுக்க வேண்டும்.

***சத்தியத்தாலும் தீண்டப்படாத உடல்***
***பிரம்மத்தால் செயல்படும்.***

# பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

அன்னையை அறிவது, ஏற்பதுஎன்பதும், பூரணயோகத்தை ஏற்பதுஎன்பதும் பெரும்பாலும் ஒன்றாகக் கருதப்படும். அன்னையைத் தெய்வமாகத் தூரத்திலிருந்து வழிபடலாம், பிரார்த்திக்கலாம், அது எளியநிலை. நெருங்கி வந்து ஈடுபாடு கொள்ளலாம், அது தீவிரமானது. அதுவும் அன்னை நம்மை ஏற்பதாகும். நாம் அவரை ஏற்பதாகாது. **அன்னையை ஏற்பதுஎனில் அவர் கொள்கைகளை முழுவதும் பின்பற்றுவதாகும்**. அது எளிதன்று. பொதுவாகப் பிரார்த்தனை பலிப்பதே அன்பர்கள் எதிர்பார்ப்பது. அன்னையின் சூழலில் வந்துவிட்டால் 10 பிரார்த்தனையில் 9 தவறாது பலிக்கும். 10வது பலிக்க நம் மனம் தடைசெய்யும்இடத்தில் நாம் மாறுவது அவசியம். 9 பலிப்பது முதல்நிலை. 10உம் பலிப்பது அடுத்தநிலை. இவை தாமாக நடப்பவை. இவற்றைக் கடந்து அன்னையை ஏற்க விழைபவருண்டு. அது பூரணயோகத்தை ஏற்பதாகும். எவரையும் அன்னை அதை மேற்கொள்ளச் சொல்வதில்லை. இதுவரை எவரும் ஏற்றதாக நானறியேன். அப்படி ஒருவர் முனைந்தால், அதற்குப் பல கட்டங்களில் பல அடையாளங்கள் உள. அவற்றைப் பலவாறு கூறலாம், விளக்கலாம். அவற்றை வாழ்க்கை மூலமாகவும், யோகம் மூலமாகவும் கூறலாம். பெரும்பாலும் அவற்றைக் குறிப்பிட்டால் எளிமையாக விளங்கும். சில தலைப்புகளுக்கு சிறு விளக்கம் தேவை. மற்றவற்றிற்கு உதாரணம் தேவை. இவற்றை முழு விளக்கமாக எழுதுவது பகவானின் பெருநூல்களின் சுருக்கமாக எழுதும் கட்டுரை இது. தம்மையறியாமல் அன்னையிடம் நெருங்கி வந்து, யோக அம்சங்களைப் பெற்றவர்கள் இதைப் படிக்கும்பொழுது தாமுள்ள நிலையை அறிய இது உதவும். ஒவ்வோர் அடையாளத்திற்கும் குறைந்தபட்சம், அதிகபட்சம், இடைப்பட்ட 10 அல்லது 20நிலைகள் உள. கூடியவரை இரு முனைகளையும், சில இடங்களில் இடைப்பட்ட ஓரிரு நிலைகளையும் எழுதுகிறேன். மௌனம் அனைவரும் அறிந்தது. எந்த விளக்கமும் தேவையில்லை. பகவான் மௌனத்தின்பின் மௌனம்என்பது முடிவான நிலைக்குரிய மௌனம். வாழ்வின்நிலைகளை சுமார் 10 அல்லது 100ஆகப் பிரிக்கலாம். அவ்வொவ்வொரு நிலைக்குப் பின்னும் மௌனம் உண்டு. அவற்றைக் குறிப்பிட்டால்மட்டும் தெளிவு எழாது, விளக்க வேண்டும், உதாரணம் தர வேண்டும். ஒரு நிலையை எழுதி, விளக்கி, உதாரணம்தர ஒரு பக்கமாகும். அதைப் போல் மௌனத்தைப் பற்றிமட்டும் 10 அல்லது 100 பக்கம் எழுதலாம். அதை நான் இங்கு மேற்கொள்ளவில்லை. அவற்றுள் சில நிலைகள்:

- ✡ **எண்ணம் நிற்பது மௌனம்.**
- ✡ **சிந்தனையறுவது அடுத்தகட்ட பெரியமௌனம்.**
- ✡ **சிந்திக்கும் கருவி கரைவது அடுத்தது.**
- ✡ **கற்பனை ஸ்தம்பிப்பது மௌனம் தரும்.**
- ✡ **உறுதி நிலைப்பது மௌனம்.**
- ✡ **உறுதி சரணடைவது பெரியது.**
- ✡ **பாகுபடுத்தும் திறனழிவது மௌனம்.**
- ✡ **இவை பகுதியான மௌனங்கள். மனம் முழுமையானது.**
- ✡ **மனம் ஸ்தம்பிப்பது, கரைவது பெரிய கட்ட மௌனங்களைத் தரும்.**
- ✡ **அதேபோல் உடலில் 10 பகுதிகள் உள்ளன. அவற்றின்பின் மௌனம் உண்டு.**
- ✡ **உடலின்பின் உள்ள மௌனம் பெரியது, பிரபஞ்ச மௌனமாகும்.**
- ✡ **முடிவானது ஜீவனுடைய மௌனம்.**

சுமார் 60க்கு மேற்பட்ட முதற்கட்டங்களை யோகவாயில்எனக் குறிப்பிட்டு எழுதுகிறேன். யோகத்திற்குரியவற்றை முதலிலும், வாழ்க்கைக்குரியவற்றை முடிவிலும் எழுதுகிறேன். இப்பட்டியல் 60உடன் முடியாது, 600உம் ஆகும். சுட்டிக்காட்டும் எழுத்தில் விரிவுரை தவிர்க்கப்படுகிறது.

1. ***மௌனம் 'அகண்ட மௌனம்பூண்டேன்' என்பது வழக்கு.***
2. ***பிரபஞ்ச ஜீவியம் (Cosmic Consciousness) அறிவுக்கு எட்டாதது ஜீவியத்திற்குப் புலப்படும் என்கிறார்.***

கடவுளைக் காட்டினால்தான் நம்புவேன்என்பவர்க்கு கடவுளை மனத்திற்கோ, அறிவுக்கோ காட்ட முடியாது. ஜீவியத்திற்கு காட்டலாம்என்கிறார். அந்நிலையில் ஜடம் சக்தியலையாகவும், ஆத்மா சக்தியலையாகவும் ஒன்றுடன்ஒன்று கலந்து நிற்கும். அதை எட்டியவர், உலகம் சூரியனைச் சுற்றி வருவதைக் காண்பார்.

**3.** ***அடி மனத்தை அடைவது.***

நாம் மேல்மனத்தினின்று செயல்படுகிறோம். முக்கியமான நேரத்தில் உணர்ச்சி எழுகிறது. இது பாதாளம். அது எழுந்தபின் மனிதன் விலங்காகச் செயல்படுவான். அடிமனம்என்பது பாதாளமும், பரமாத்மாவும் இணையுமிடம். பரமாத்மாவை நாம் காண்பதில்லை. வாழ்வில் உயர்ந்த பண்புகள் பரமாத்மாவின் பிரதிநிதி. அடியிலிருந்து விலங்குணர்வு எழும்பொழுது பண்பால் அதை அடக்கினால் அடிமனம் செயல்படும்.

**4.** ***ஆதியான அறியாமையை இழப்பது.***

நாம் பிரம்மம்என்பதை மறந்து, நாம் உடல், மனம்என நாம் வாழ்வை நடத்துகிறோம். நாம் பிரம்மம்என்பதை மறப்பது ஆதியின் அறியாமை. அது நினைவுகூர்வது அவ்வறியாமையை இழப்பதாகும். 7 அறியாமைகளில் முதலில் நாம் கடக்க வேண்டியது இது.

**5.** ***அடிப்படையான முதல் பூரணயோகசித்தி.***

***Synthesis of Yogaவில் 'சமர்ப்பணம்' என்ற அத்தியாயத்தில் பகவான் இக்கருத்தைத் தெரிவிக்கிறார். அது 3 பகுதிகள் உடையது.***

1. இறைவனை (அன்னையை) அகத்தில் காண்பது.
2. புறத்தில் காண்பது.
3. இவை தவிர அவன் உள்ள உலகில் இறைவனைக் காண்பது.

பல அன்பர்கள் அன்னையை, பகவானை மனதில் காண்கின்றனர். சிலருக்கு போட்டோவில் அவர்கள் உயிருடனிருப்பது தெரிகிறது. மற்ற சிலருக்கு வானிலும், சுவரிலும் அவர்கள் சூட்சுமஉலகில் தரிசனம் தருகின்றனர். இவை ஆரம்பநிலை. நினைத்தால் தரிசனம் கிடைப்பது இடைப்பட்டநிலை. மூன்று கட்டங்களிலும் பகவானுக்கு அலிப்பூரில் நாராயண தரிசனம் கிடைத்ததைப்போல் நமக்கு ஸ்ரீ அரவிந்ததரிசனம் கிடைப்பது முழுமையான சித்தி. இது முதல் சித்தியின் முழுமையான உருவம்.



**6.** ***அகந்தை சிதைந்து பிரபஞ்சம் வெளிப்படுவது.***

இதுவரை நமக்கு எரிச்சல் மூட்டியவை (reaction) இனி அப்படி இல்லாமலிருப்பது முதல் ஆரம்பம். ஜாதி, ஊர், குடும்பம் குறைவானதானால், அதைச் சுட்டிக்காட்டினால் போராட்டம் எழும். அடிதடி, சண்டை எழும். அது மறைவது ஆரம்பம். அதில் உள்ள உண்மையை ஏற்று எரிச்சல்படாவிட்டால், அச்சந்தர்ப்பங்கள் எழும். அவற்றுள் - ஜாதி, ஊர், குடும்பம் - உள்ள உயர்வு வெளிப்படும் சந்தர்ப்பம் வரும். எதையுமே நாமே வைத்துக் கொள்வது (possessive), இரகஸ்யமாக இருப்பது அகந்தையின் கருவி. பிறருடைய பெருமையை மனம் ஏற்று மகிழ்வது, அது வளர நாம் செயல்படுவது, அதை இலட்சியமாகக் கொள்வது அடுத்தஅடுத்த கட்டங்கள். நம் வருங்காலத் திட்டங்களில் பலன், பெயர் நமக்கில்லைஎன வேலை செய்வது அகந்தை சிதைய உதவும். கடமை எனக்கு, பலன் அடுத்தவர்க்குஎன்ற இலட்சியம் நல்லது.

இதுவரை அகந்தையை அழித்து யோகம் செய்ய முயன்றது பௌத்தம். பௌத்த பிக்ஷுக்களிடம் முனைப்பிருக்காது. ஆசியா முழுவதும் பரவியதற்கு அகந்தையழிந்தது முக்கிய காரணம். முனைப்பில்லாதது யோகத்தில் முக்கியம். நாம் அதைப் பெறுவது சிரமம். முனைப்பு வடநாட்டைவிட தென்னாட்டில் அதிகம். அதிக விபரம் தெரிவது முனைப்பை வளர்க்கும். நாம் புதியதாக அறிவதை அகந்தை பெறாமல் மனமோ, அறிவோ பெறும் நோக்கம் நல்லது. வேலையில் உள்ள திறமை வேகம் தரும். அது முனைப்பைக் கூராக்கும். நம் திறமையிலுள்ள நம்பிக்கை தடம் மாறி அன்னைக்கு வருவது சரணாகதிக்கு உதவும். சுறுசுறுப்பானவர்க்கு எந்த நேரமும் ஏதாவது செய்யத் தோன்றும். எதுவும் செய்ய வேண்டாம்என்று முடிவு செய்தால், அஸ்திவாரத்திலிருந்து வேகம் தீவிரமாக எழும்.

**அகந்தையின் முனைப்பு மேலேயும்,**

**அறிவின் தீட்சண்யம் அதனடியிலேயும்,**

**வேலையில் திறமை வேகத்தை எழுப்புவதையும்,**

**சுறுசுறுப்பு இடைவிடாமல் செயல்படுவதும்,**

**அகந்தை வளர உதவும், சமர்ப்பணத்திற்கும் சரணாகதிக்கும் தடையாகும்.**

**சுயநலம் பரநலமானால்,**

**சொந்த அபிப்பிராயம், பிறர் கோணத்தில் காணும் கருத்தானால், கடமை எனக்கு, பலன் பிறர்க்குஎனில்,**

**என் பெயர் வெளி வரக்கூடாதுஎனக் கொண்டால்,**

**ஏதாவது செய்ய வேண்டும்என முனையாவிட்டால்,**

**காரியம் சக்தியால் நடைபெறுகிறது, நம்மாலில்லைஎன்ற கருத்து தெளிவானால்,**

**நல்லெண்ணம் நம்மை மீறி எழுமானால்,**

**அகந்தை வளராது, முனை மழுங்கும்.**

## 7. *தலையிலுள்ள மனத்தின் மையம், தலைக்குமேல் போக வேண்டும்.*

நம் சிந்தனை மனத்திலுள்ளது. மனம் மூளையில் உறைகிறது. மனம் 4 கட்டங்கள் உயர்ந்து தெய்வீக மனமானால் (overmind) அம்மையம் புருவ மையத்திற்கு வரும். அது கிருஷ்ண பரமாத்மாவின் நிலை. இராமாவதாரம் முனிவர் மனத்திற்குரியது. அது இந்த நான்கு கட்டங்களில் முதலானது. மௌனத்தால் நிரம்பியது. பூரணயோகம் மனத்தைக் கடந்து சத்தியஜீவியத்தை நாடுகிறது. தெய்வீக மனத்தின்மீது பொன்மூடியுண்டு. அதைக் கிழித்து மேலே சென்றால்தான் சத்தியஜீவியம். அப்படிச் சென்றால் தலைக்கு மேலுள்ள சகஸ்ரதளம் - ஆயிரம் தாமரைச் சக்கரம் - திறக்கும். குந்தளினி திறந்து சகஸ்ரதளம்வரை வந்தால் சகஸ்ரதளம் மோட்சம் தரும். வேதத்தை அதற்கு மேலிருந்து எழுதினர். ஷேக்ஸ்பியர்போன்ற கவிகள் தலைக்குமேல் சகஸ்ரதளத்திற்குக் கீழிருந்து எழுதினர். எண்ணமையம் தலைக்குமேலே போனால் அன்பர், ஷேக்ஸ்பியர்நிலையை அடைவார். பூரணயோகத்தின் முதற்கட்டமாக (1) எண்ணம் தலைக்குமேல் போகவேண்டும், அல்லது (2) நெஞ்சுக்குப்பின்



சென்றடைய வேண்டும்என்கிறார். இந்நிலை முனிவருடைய மௌனம், ரிஷியின் திருஷ்டி, யோகியின் ஞானம், தெய்வ நிலையைக் கடந்தது. அதுவே பூரணயோகத்தில் முதல்நிபந்தனை. அளவுகடந்த மௌனம் அதனடையாளம்.

- **அந்நிலையில் நாம் சிந்திப்பதில்லை.**
- **சிந்தனை அற்றுப்போகும்.**
- **தேவைப்படும் நேரம் சிந்தனை மேலிருந்து தலையுள் வருவது தெரியும்.**
- **இது சூட்சுமமனம்.**
- **இது சத்தியஜீவியமில்லை, அதற்குப் போகும் பாதை.**

## 8. *ஜீவ நிஷ்டை - All Inclusive Concentration.*

ஞானயோகம் மனத்திலும், கர்மயோகம் உணர்விலும், பக்தியோகம் இதயத்திலும், ஹடயோகம் உடலிலும் செயல்படுபவை. எந்த யோகமும் ஒரு கரணத்தால் நடப்பது. பூரணயோகம் எல்லாக் கரணங்களாலும் செய்யப்படுவது. அதற்குரிய மையம் இதயத்தின் பின்னாலுள்ளது. எவரும் தம் குடும்பத்தைக் காப்பாற்றுவார். உடன்பிறந்தவர் 4பேர் அல்லது 8பேரானால் அத்தனைக் குடும்பத்தையும் ஒருவரே காப்பாற்றுவதுஎன்பது உலகிலில்லை. பூரணயோகம் அதுபோன்றது. நிஷ்டையை மனத்திலிருந்து நெஞ்சுக்குப்பின்னால் கொண்டுபோவது பூரணயோகத்தில் முதல் நிபந்தனை. பலிப்பது கடினம். பலித்தால் நம் சுற்று வட்டாரமே அமைதியாகும். **இதனுள் அகமும் புறமும் அடங்கி உள்ளது. அதாவது புறத்தை உட்கொண்ட அகத்தின்மையம் நெஞ்சுக்குப் பின்னுள்ள மையம்.** நிஷ்டை முதிர்ந்தால் சமாதி நிலையை எய்தலாம். இந்த நிஷ்டை முதிர்ந்தால் சமாதிநிலை விழிப்பில் கிட்டும். சேர, சோழ, பாண்டியர் தமிழ்நாட்டின் ஒரு பகுதியை ஆண்டனர். இன்று இந்திய சர்க்கார் வடநாட்டில் 56 தேசம்எனப் பெயர்பெற்ற அத்தனை இராஜ்ஜியங்களையும் தன்னுட் கொண்டுள்ளது. ஞானயோகம் போன்றவை சோழ இராஜ்யம் போன்று நாட்டின் ஒரு பகுதி. பூரணயோகத்திற்குரிய நிஷ்டை இந்தியசர்க்கார்போன்றது. பூரணயோகமையம் - அகம் -

பிரபஞ்சத்தைத் தன்னுட்கொண்டது. யோகம் பலித்தால் பிரபஞ்சத்தை உள்ளே காணலாம். யசோதை, கிருஷ்ணன் வாயில் கண்டது உலகம். இது பிரபஞ்சம். உலகில் எது நடந்தாலும் உள்ளே தெரியும். உள்ளே நடப்பது எதுவானாலும் அது உலகையெட்டும். அதனால் இதைப் பூரணயோகம் என்றார்.

**9.** ***புலனின்றி மனம் நேரடியாகச் செயல்படுவது.***

யோகத்தில் ஆரம்பக் கட்டம் புலனை அவிப்பது. பூரணயோகம் புலனை அழிக்கவோ, அவிக்கவோ சொல்லவில்லை. **புலன்களைத் தூய்மைப்படுத்தச் சொல்கிறது**. மனம் ஜட உலகில் செயல்பட மூளைஎன்ற கருவியை ஏற்படுத்தியதுஎன்பது தத்துவம். புலன்கள் மூளையின் கருவிகள். கண்மூடியிருக்கும்பொழுது பார்க்க முடிவது, அடுத்த ஊரில் பேசுவது கேட்பது, அடுத்த தெருவில் சமையல் வாடை தெரிவது ஆகியவை புலனின்றி மனம் நேரடியாகச் செயல்படுவதாகும். புலனைத் தூய்மைசெய்தால் கண்ணுக்கு விகாரம் தெரியாது, அழகாகத் தெரியும். உலகில் தீமையில்லை, பாவமில்லை, நோய், துன்பம், மரணமில்லைஎனத் தத்துவத்தை மனம் ஏற்பது ஞானம். தூய்மையான புலன்கள் அவற்றை உணர்வது சித்தி. விகாரமான குழந்தை தூய்மையான கண்ணுக்கு அழகாகத் தெரியும். மனம் நேரடியாகக் குழந்தையின் ஆத்ம வசீகரத்தைக் காண்பதாகும். மனம் சக்தி வாய்ந்தது. நேரடியாகப் புலனைத் தவிர்த்துச் செயல்படும்பொழுது சக்தி வாய்ந்தது. அடுத்த ஊர்க் கூட்டத்தில் பேசுபவர் நம் எண்ணத்தைப் பேச வேண்டும் என நாம் நினைத்தால், மனம் புலனால் சிறைப் படாததால், அதன் எண்ணம் நேரடியாகப் பேச்சாளர் மனதை எட்டி, அவரைப் பேசச் சொல்லும். இவை உயர்ந்த சித்திகள். இத்தலைப்பு முதல் நிலையைக் குறிக்கிறது. விஞ்ஞானம் இத்தத்துவத்தைத் தலைகீழே கூறும். மூளை செயல்படுவதே மனம் என அது கூறுகிறது. அதுவே நாத்திகவாதத்திற்கும், ஆன்மீகத்திற்கும் உள்ள மாறுபாடு. முடிவான நிலையில் ஆன்மா ஜடத்தை ஆளும். யோகி நினைப்பது உலகில் எந்த இடத்திலும் செயல்படும், மனிதர்களைச் செயல்பட வைக்கும், பொருள்களை நகர்த்தும், எதையும் செய்யும். புலன்கள் காலத்துள் செயல்படுகின்றன. மனம் கடந்ததில் உள்ளது. வளரும் ஆன்மா மூன்றாம்நிலைக் காலத்திற்குரியது.



**10.** ***பிரம்மம் நாடும் ஆனந்தத்தை நுகர்வது.***

பிரம்மம் ஆனந்தமயமானது. மோட்சத்தில் பிரம்மத்தை அடைந்தவர் பெறுவது பிரம்மானந்தம். என்றும் பிரம்மம் இதைப் பெற்றுள்ளது. **இதைவிடப் பெரிய ஆனந்தத்தை நாடி பிரம்மம் உலகை சிருஷ்டித்தது**. அது பிரம்மம் தேடும் ஆனந்தம். பகவான் ஸ்ரீ அரவிந்தர் அவதரிக்கும்வரை புவியில் எவரும் அனுபவிக்காத ஆனந்தமிது. இதை அனுபவிக்காத பக்தரில்லை. ஆனால் இது பூரணயோக வாயில்என அவர் அறிய வழியில்லை. இறைவனின் ஸ்பர்சம் இதயத்தைத் தாண்டி உடலைத் தீண்டியபொழுது, உடல் சிலிர்க்கும், புல்லரிக்கும். அதுவே இந்த ஆனந்த ஸ்பர்சம். இந்த ஆனந்தம் முனிவர், தவசி, ரிஷி, யோகி அறியாதது. அன்னையின் சூழல் இதைத் தாங்கி வருகிறது. அன்னையைப் பிறந்தநாளன்று தரிசித்த பெண்மணி 3நாள்வரை இதை அனுபவித்தார். அன்னையின் சங்கீதம் கேட்டு உள்ளம் உருகுபவர் இவர். இவருக்கு இது என்ன வாயில்எனத் தெரியாது. தெரிந்தால், பாராட்டினால் – அதற்குரிய குணநலன்களை ஏற்றால், அவருக்கு யோகம் சித்திக்கும். நாம் எழுதும் தமிழ்ச் செய்யுளுக்கும், இளங்கோ அடிகளின் அமர காவியத்திற்கும் உள்ள வித்தியாசம் மோட்சம்தரும் ஆனந்தத்திற்கும், பிரம்மம்நாடும் ஆனந்தத்திற்கும் உண்டு. கல்லூரிப் பேராசிரியருக்கும், நியூட்டன் போன்ற மேதைகட்கும் உள்ள வித்தியாசம் இது. அன்னை இவ்வாயிலை அனைவருக்கும் திறக்கிறார். நாம் அந்த நேரம் அனுபவிக்கிறோம். என்னஎன்ற விபரம் தெரியாமல் அனுபவிக்கிறோம். அத்துடன் மறந்து விடுகிறோம். Pleasure, happiness, joy, bliss, delight என்று ஆங்கிலத்தில் வரிசைக்கிரமமாக வரும். தமிழில் முதல் மூன்றும் சந்தோஷம் ஆகும். அடுத்த இரண்டும் ஆனந்தமாகும். உடல் பெறுவது முதல்; மனம் பெறுவது அடுத்தது; உள்ளம் பெறுவது மூன்றாவது; ஆத்மா பெறுவது அடுத்தது; வளரும் ஆத்மா பெறுவது முடிவானது.

*தொடரும்......*

❀ ❀ ❀

# நல்லெண்ணம்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

இல. சுந்தரி

''சரி பாலு, நீ புறப்படத் தயாராகிவிடு. வரும் வெள்ளிக்கிழமை இரவே நாம் சென்னை செல்கிறோம். இனி எந்தக் குழப்பமும் வேண்டாம்'' என்று உறுதியாய்க் கூறினான் வாசு.

இண்டர்வியூவுக்கு நிறையபேர் வந்திருந்தார்கள். இத்தனை பேரில் தனக்கு வேலை கிடைக்கவேண்டுமேஎன்று பாலுவுக்குக் கவலை.

வாசுவோ, 'அன்னை அனந்தம். இத்தனை பேர்க்கும் வேலை கிடைத்தாலும் வியப்பில்லை' என்று எல்லாவற்றையும் ரசித்துக் கொண்டிருந்தான். பலரும் நம்பிக்கையுடனும், உற்சாகத்துடனும் இண்டர்வியூவை எதிர்கொண்டனர். வாசு நிறைந்த மகிழ்வுடன் இண்டர்வியூ முடித்து வெளியே வருவதை பாலு கண்டான்.

''பாலு, உற்சாகமாயிரு. கேட்கப்படும் கேள்விகளுக்கு மகிழ்வுடன் பதில் சொல். இப்படி 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொள்ளாதே. உனக்கே இந்த வேலை கிடைக்க வேண்டுமென்று நான் அன்னையிடம் பிரார்த்தித்தவண்ணமிருப்பேன்'' என்று முதுகில் தட்டி உற்சாகப்படுத்தி உள்ளே அனுப்பினான்.

அன்னையிடம் வந்தபிறகு வாசு மாறியிருப்பது பாலுவுக்கும் சிறிதளவு புரிந்தது. படிக்கும் நாட்களில் தன்னுடன் எல்லாவற்றிற்கும் போட்டியிட்ட அவன் இப்போது விட்டுக்கொடுக்கவே ஆர்வப்படுகிறான்.

பாலு உண்மையிலேயே படிப்பில் கெட்டிக்காரன். நல்ல திறமைசாலி. படிப்பு முடிந்து மூன்றாண்டுக் காலமாக வேலை தேடி கிடைக்காமல், வீட்டுச் சூழலும் நெருக்கும் நிலையில் மனம் தளர்ந்து



போயிருந்தான். இருந்தாலும் இன்றைய இண்டர்வியூவை வெகு அழகாகச் செய்திருந்தான். தனக்கே கிடைக்கும்என்று நம்பும் அளவு செய்திருந்தான் வெளியேயிருந்த கும்பலை நினைத்தபோது, ஒருவேளை தனக்குக் கிடைக்காதோஎன்றும் எண்ணத் தோன்றியது. வாசுவின் பிரார்த்தனைக்காகவாவது தனக்குக் கிடைத்தால் தேவலை என்றும் நினைத்தான்.

''எப்படி பதிலளித்தாய்? நன்றாகச் செய்தாயல்லவா?'' என்று வெளியே வந்த அவனை அன்புடன் வரவேற்றான்.

''நன்றாகவே செய்திருக்கிறேன். இப்போதெல்லாம் திறமைக்கு ஏதடா மதிப்பு? எவனாவது, பெரிய மனிதர் வீட்டுப் பையனுக்கு, வீட்டில் இருந்தபடியே பேசி வேலை வாங்கிவிடுவார்கள். தகுதி, திறமை, இவற்றைப் பத்திரமாய் எடுத்துக்கொண்டு நாம் பைத்தியம்போல் திரும்பிச் செல்வோம்'' என்று சலிப்புடன் கூறினான்.

''ஒன்று சொல்லவா பாலு, நம் எண்ணமே எல்லாவற்றையும் உற்பத்திச் செய்கிறது. சலிப்பும் தெய்வ உதவியை விலக்கிவிடும். நல்லதையே நினைத்து சந்தோஷமாக இருந்தால் தடையின்றி நல்லதே நடக்கும். தகுதியுள்ள அத்தனை பேருக்கும் ஏன் வேலை கிடைக்கக் கூடாது? முடியும்என்றே நம்புகிறேன்'' என்றான் வாசு.

''இப்போதெல்லாம் நீ நிறைய மாறிவிட்டாய் வாசு. படிக்கும் நாட்களில் போட்டி போடுவாய். இன்று என்னையும் இண்டர்வியூவிற்கு அழைத்து வருகிறாய்'' என்று பாலு வியப்புடன் கூறினான்.

''இது வெறும்மாற்றம்தான் பாலு. இதற்கே அன்னை செயல்படுவார். திருவுருமாற்றம் நிகழ்ந்தால் உலகமே மாறிவிடும்'' என்றான் வாசு.

''அதெல்லாம் எனக்குப் புரியாது''.

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோது, ''நீங்களெல்லாம் போகலாம். மாலை 4 மணிக்கு வந்து நோட்டீஸ் போர்டில் 'ரிஸல்ட்' பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார் அட்டெண்டர்.

எல்லோரும் வெளியேறினர். வெளியில் சென்று சாப்பாட்டை

முடித்துக்கொண்டு நான்கு மணி வரை வெளியில் காத்திருந்து, 4 மணிக்கு ரிஸல்ட் பார்க்க வாசுவும், பாலுவும் வந்தனர். உள்ளே செல்வதும், வெளியேறுவதுமாய் அனைவரும் போய்விட்டனர். 'என்ன ரிஸல்ட்டோ?' என்ற பதற்றம் பாலுவுக்கு. 'எது நேர்ந்தாலும் அன்னையின் அருளாக ஏற்கவேண்டும்' என்று மனதைத் தெளிவாக வைத்துக்கொண்டு வாசுவும் வந்தான்.

அத்தனை பேரில் இவர்கள் இருவர் பெயர்கள் மட்டுமே நோட்டீஸ் போர்டில் இருந்ததுடன், இவர்கள் இருவரில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்என்ற குறிப்பும் இருந்தது. பாலுவின் முகம் விழுந்து விட்டது. "போடா, இதில் எனக்குக் கிடைக்கும்என்று நிச்சயம் ஒன்றும் இல்லை" என்றான் பாலு.

வாசு அவனை அன்புடன் கடிந்துகொண்டான். "உன்னை இத்தனை வற்புறுத்தி அழைத்து வந்து நம்பிக்கையூட்டியும் நீ ஏன் அவநம்பிக்கையுடன் இருக்கிறாய்? நம்பிக்கையுடனிரு, உனக்கே கிடைக்கும்" என்றான்.

"இத்தனை நம்பிக்கையுள்ள உனக்குக் கிடைக்காமல் எனக்கு எப்படிக் கிடைக்கும்?"

"ஆம், என் நம்பிக்கை எனக்கு வேலை கிடைக்கவேண்டும் என்பதில்லை, உனக்குக் கிடைக்கவேண்டும் என்பதில்தான். எனவே, நம் இரண்டு நம்பிக்கைகளும் சேர்ந்தால் வெற்றிதானே" என்றான்.

"எப்படியடா இப்படிப் பேசுகிறாய்! எனக்குக் கிடைப்பதில் அப்படி என்ன ஆர்வம் உனக்கு? போட்டியில் நீ தோற்று, நான் வெற்றியடைந்த போதெல்லாம் என்னுடன் பேசாமல் பல நாள் இருப்பாயே, இப்பொழுது என்ன எனக்குக் கிடைக்கப் பிரார்த்திக்கிறாய்?"

"என் நல்லெண்ணத்தைப் பரிசோதிக்க இதை ஒரு வாய்ப்பாய் ஏற்றிருக்கிறேன். எனவே, இதில் நீ வெற்றி பெற்றால்தான் என் நல்லெண்ணம் உண்மை. ஆனால் அதையும் தாண்டி எனக்கு இன்னொரு பரிசும் உண்டு. அது எனக்கு வேண்டும்" என்றான் வாசு.

"கடைசியில் உனக்கு ஏதோ பரிசு கிடைப்பதற்காகத்தானே



எனக்கு வேலை கிடைக்கப் பிரார்த்திக்கிறாய்?"

"ஆமாம், ஆனால் அந்தப் பரிசு நீ நினைப்பதுபோல் பணமோ, ஒரு பொருளோ அன்று. அந்தப் பரிசைக் கண்ணால் பார்க்கவும் முடியாது. உள்ளே உணரத்தான் முடியும்" என்றான்.

"என்னடா இது புதுக்கதை!" என்றான் பாலு.

"புதுக்கதை இல்லையடா, புதிய உண்மை" என்றான் வாசு.

"என்ன நீ, இன்று புதிர்போட்டுப் பேசுகிறாய்!"

"ஆமாம், இது ஒரு புதிர்தான். நம் வேலைக்குப் பிறகுதான் இந்தப் புதிர் அவிழும்" என்றான் வாசு.

"எனக்கு வேலை கிடைத்தால் உனக்குப் பரிசு, உனக்கு வேலை கிடைத்தால் எனக்கு ஏமாற்றம், இது என்னடா நியாயம்?"

"நீ ஏமாறக் கூடாதுஎன்பதுதானே என் பிரார்த்தனை. அது நிறைவேறாவிட்டால், எனக்கு வேலை கிடைத்தாலும் அதில் எனக்குச் சந்தோஷமில்லை. உனக்கு இல்லாத வேலையை நானும் ஏற்கப்போவது இல்லை".

இவர்கள் மெல்லப் பேசிக் கொண்டிருக்கும்போதே உள்ளே இருந்து இவர்களுக்கு அழைப்பு வந்தது.

"பாலு, வாசு, நீங்கள் இருவருமே எங்கள் பார்வையில் சமமாகத் தேறியுள்ளீர்கள். ஆனால் உங்களில் ஒருவருக்குத்தான் இங்கு வேலை. உங்களில் ஒருவர் மற்றவருக்காக விட்டுக் கொடுத்தாலும் சரி, அல்லது சீட்டுப் போட்டுப் பார்க்கச் சம்மதித்தாலும் சரி" என்றார் தேர்வாளர்.

"சீட்டுப் போடலாம்" என்றான் பாலு அவசரமாக.

"இல்லை சார், இவருக்கே கொடுத்துவிடுங்கள்" என்று மலர்ச்சியாய்க் கூறினான் வாசு.

"நீங்கள் இருவரும் ஒரூர்க்காரர்கள்எனத் தெரிகிறது. நீங்கள் நண்பர்களா?" என்றார் தேர்வாளர்.

"ஆமாம் சார்" என்றான் வாசு.

“பாலு, நீங்கள் என்ன சொல்கிறீர்கள், உங்களுக்கே கொடுத்து விடலாமா?” என்றார் தேர்வாளர்.

பதில் கூறாது நின்றான் பாலு.

“எதற்காக நண்பருக்கு விட்டுக்கொடுக்கிறீர்கள், நண்பர் என்பதற்காகவா, இதைவிடப் பெரிய வேலை வேண்டும் என்பதற்காகவா?” என்றார் தேர்வாளர்.

“பெரிய வேலை வேண்டும் என்பதற்காகவல்ல, பெரிய மனநிலை பெறுவதற்காக” என்றான் வாசு.

“என்ன சொல்கிறீர்கள்?”

“ஆமாம் சார், நான் ஒருவரிடம்சேர எனக்கு இந்தச் செயல் (விட்டுக் கொடுப்பது) செய்யவேண்டும். அதற்காகவே நம்பிக்கை இழந்த இவனை ஆர்வமூட்டி அழைத்து வந்தேன்” என்றான் வாசு.

பாலுவுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

“என்ன சொல்கிறீர்கள்? தெளிவாகச் சொல்லுங்கள்” என்றார் தேர்வாளர்.

“அதை நீங்கள் தேர்வு செய்த பிறகு சொன்னால்தான் என் சரியான உளநிலையை நான் உணர முடியும்” என்றான் வாசு.

“சரி, உங்கள் விட்டுக் கொடுத்தலால் உங்கள் நண்பர் பாலுவுக்கே இந்த வேலையைத் தர முடிவு செய்துவிட்டோம்” என்று கூறியவர் அப்பாயிட்மெண்ட் ஆர்டர் தயாரிக்க அலுவலக ஊழியர்க்கு உத்தரவிட்டார்.

“இப்பொழுது சொல்லுங்கள் இரகசியத்தை” என்று வாசுவை நோக்கித் தேர்வாளர் கூறினார்.

“நான் அன்னை அன்பன். தனக்கு நல்லது வருமுன் அது அடுத்தவர்க்குவர ஆர்வப்பட வேண்டும். அதுவே நல்லெண்ணம். நல்லெண்ணம் உள்ளவர் அன்னையை மேன்மேலும் பெறலாம்என்ற சான்றோர் ஒருவரின் வாக்கைச் சத்தியவாக்காக ஏற்றேன். அதைப்



பரிசோதிக்க எண்ணியபோது இந்த வேலை வாய்ப்பு விளம்பரம் கண்டேன். எனக்கு வேலைவேண்டும்என்ற என் மனநிலையை, நண்பனுக்கு முதலில் வேண்டும்என மாற்ற முயற்சி செய்து மனத்தைத் தயாரித்தேன். போட்டி, பொறாமையைத் தவிர்த்து, கணந்தோறும் நல்லெண்ணத்தை வளர்த்தேன். என் நல்லெண்ணம் உண்மையானால் இவனுக்கே இந்த வேலை கிடைக்கும்என நம்பினேன். அப்போதுதான் அன்னை அன்பன்என்ற தகுதியும் எனக்குக் கிடைக்கும்” என்றான்.

தேர்வாளர் வியப்பும் மகிழ்வுமாய் வாசுவை ஏறிட்டதோடு, “உங்கள் தகுதிக்கு (அன்னைஅன்பன் என்பதற்கு) உங்களுக்கும் ஒரு வேலையை எங்கள் நிறுவனத்திலேயே ஏற்படுத்தித்தர முடிவு செய்துவிட்டேன்” என்றார்.

ஆனந்த மிகுதியில் வாசு நன்றிக்கண்ணீர் வடிய நின்றான்.

தன் சின்ன புத்திக்கு வெட்கி, நண்பனின் நல்லெண்ணத்திற்கு உருகி, நன்றியுடன் அவன் கையைப் பற்றினான் பாலு.

*முற்றும்.*

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

உடலின் அகந்தையே மிக வலுவானது. அதன் வேர், சிந்தனையிலுள்ளது. பகுத்தறிவாக அகந்தை ஆரம்பிப்பதால் அதன் வேர் சிந்தனையில் இருக்கிறது. பின்னர் பிராணனுக்கும் உடலுக்கும் அகந்தை பரவுகிறது. உடல் இருள் நிறைந்ததாதலால் உடலில் எளிதில் சிக்கிக் கொள்கிறது. விலங்கினத்தில் எந்த அளவு மனம் உற்பத்தியாகிறதோ, அந்த அளவுக்கு அகந்தையும் எழும்.

***அறிவிலுள்ள அகந்தையின் வேர்.***

**Submitting to the worst, as if it is surrender, is superstition.**
**The smaller we are, the more we revolt.**
**Fear of being selfish or a rebel is still fear.**
**சரணாகதியென நினைத்து, மோசமான நிலைக்குப் பணிவது மூடநம்பிக்கை.**
**சிறுமை புரட்சி செய்யும்.**
**சுயநலமாக இருக்க பயப்படுவதும், புரட்சிக்குப் பயப்படுவதும் பயமே.** - *அஜெண்டா*

✡ இல்லாததை நம்புவது மூடநம்பிக்கை.

மாதம் மும்மாரி பெய்யும், அமாவாசைக்கு மழை பெய்யும்என நம்புவது மூடநம்பிக்கை.

இல்லாததை இருப்பதாகக்கொள்வது மூடநம்பிக்கை.

தவறானதை இலட்சியமாகக்கொண்டு, அதற்குப் பணிவது மூடநம்பிக்கை.

குடித்துவிட்டு ஆர்ப்பாட்டம் செய்யும் கணவனுக்குப் பணிவிடை செய்வது,

கொடுமையான உள்ளங்கொண்ட தகப்பனார் படிப்பின் பேரால் மகனைத் துன்புறுத்துவது,

ஊழல் மலிந்த தலைவரின் பொய்யை கட்சிக்காக நம்பிப் பணிவது,

ஆயுள்முழுவதும் ஒருமுறையும் பலன் தாராத நோன்பை நம்பிக்கையுடன் எடுப்பது,

மனப்பாடம் செய்தால் அறிவு வரும்என நம்புவது,

ஸ்டிரைக் செய்தால் உயர்ந்த இலட்சியம்என்பது,

விவாகரத்து செய்வது பெருமைஎன நம்புவது,



கலப்புக்கல்யாணம் தவறுஎன நினைப்பது,

கலப்புத்திருமணம் இலட்சியம்எனக் கொண்டு, வேறு ஜாதியில் திருமணம் செய்வது,

ஊனமுற்ற பெண்ணைத் திருமணம் செய்வதால், அவளுக்கு வாழ்வு தருகிறோம்என மனம் கூறுவது,

நாலுபேர் செய்வதை நாமும் செய்வது சரிஎனப் புரிவது,

எதிர்ப்பது ஏற்றம்என கேள்விப்பட்டு நம்புவது,

அயோக்கியனை ஏமாற்றுவது நல்லதுஎன மனம் கூறுவது,

நாம் உற்பத்தி செய்யும் பொருளை அடக்கவிலைக்கு விற்பது சேவை எனக் கொள்வது,

''ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்'' எனப் பாரதி கூறிய பொன்மொழியை நம்பி, ஏழைகட்கு இலவசப் பள்ளி நடத்துவது,

பிறருக்கு வலிய உதவுவது,

கொடுத்த கடனைக் கேட்காமலிருப்பது பெருந்தன்மைஎன சிறியவன், கேட்க முடியாதவன், கேட்டுப்பெற முடியாதவன் ஏற்கும் கொள்கை போன்றவை

**மூடநம்பிக்கை.**

இவற்றை மூடநம்பிக்கையென அறிவிக்கும் பழமொழிகள் பல.

கடன் கேட்காமல் வாராது.

வலியப் போனால் மரியாதையிருக்காது.

சேவை எளியவன் செய்வதில்லை, 'விரலுக்குத் தகுந்த வீக்கம்'.

அடக்கவிலைக்கு விற்றால் இலாபம் புரோக்கருக்குப் போகும், ஏழைக்குப் போகாது.

அயோக்கியனை ஏமாற்றினாலும், பலன் ஏமாற்றியதற்கே வரும்.

நாலுபேர் செய்வதைச் செய்தால், நாலுபேருக்குக் கிடைப்பது கிடைக்கும்.

ஊனமுற்ற பெண்ணோ, பையனோ உயிரை எடுப்பான்.

கலப்புத்திருமணம், திருமணம். அதில் இலட்சியமோ, தவறோ இல்லை.

விவாகரத்து பெருமையென நினைத்தால், பெருமை ரத்து செய்யும்.

ஸ்டிரைக்செய்வது உரிமைக்காக. ஸ்டிரைக்குக்காகச் செய்தால், பட்டினி இருக்கவேண்டும்.

மனப்பாடம் ஞாபகத்தை வளர்க்கும், அறிவு மங்கும்.

சம்பிரதாயம் அன்னை அன்பர்க்கு உயிரை எடுக்கும்.

கொடுமை யார் செய்தாலும் கொடுமையே, தகப்பனார் செய்வதால் கடமையாகாது.

✡ மூடநம்பிக்கை பலவிதத்தின.

எந்த வகையிலும் மூடநம்பிக்கையில்லாமலிருக்க பகுத்தறிவு தேவை.

✡ பயமுள்ளவரை மனிதனாக முடியாதுஎன அன்னை கூறியுள்ளார்.

❀ ❀ ❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பிரிசம் ஒளியை 7 வண்ணமாகக் காட்டுகிறது. தோற்றவன் சோகமடைகிறான். கைதிக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படுகிறது. வர்ணத்தைப் பார்ப்பவர்க்கும், தோல்வி அடைந்தவனுக்கும், கைதிக்கும் அவரவர் நிலை தெளிவானது, முடிவானது. பிரிசத்தைத் தலைகீழாக வைத்தால், வர்ணம் மறைந்து வெண்ணிற ஒளியாகிறது. தோல்வியை எதிராகப் புரிந்துகொண்டால், சோகம் சந்தோஷமாக மாறும். நீதிபதியின் அபிப்பிராயம் தண்டனையை விலக்க வல்லது.

மறுக்க முடியாத உண்மைகள் எண்ணத்திலிருந்து ஜீவியத்திற்குப் போனால் தலைகீழே மாறும். மனித உடலும் சக்தியின் அதிர்வாகும்.

***எண்ணம் ஜீவியமானால் உண்மையின் உருவம் மாறும்.***



# அன்பர் கடிதம்

*ஓம் நமோ பகவதே ஸ்ரீ அரவிந்தாய நம:*
*ஸ்ரீ அன்னையே நம:*

என் பெயர் தனலட்சுமி. என் கணவர் பெயர் சிவக்குமார். எங்களுக்கு நந்தகுமார்என்ற 2½ வயது பையன் உள்ளான். அவனுக்கு 2 வயதில் டைபாயிடு (typhoid) தடுப்பூசி போட்டதில் ஒத்துக் கொள்ளாமல் வீக்கமாகிவிட்டது. பின், ஸ்கேன் மூலம், அங்கு சீழ் பிடித்துள்ளது தெரியவந்தது. உடனே ஆப்பரேஷன் செய்ய வேண்டுமென்றனர். அப்பொழுது மற்ற தெய்வங்களுடன் அன்னையையும் சேர்த்து பிரார்த்தனை செய்துவந்தோம். ஆப்பரேஷன் செய்தும் முழுகுணம் கிடைக்கவில்லை. தினமும் எங்கள் குழந்தை படும் வேதனையை தாங்க முடியவில்லை. மதுரைக்குச் சென்று காண்பித்ததில் அங்கு இன்னுமொரு ஆப்பரேஷன் செய்ய வேண்டும் என்றனர். என் கணவரின் தம்பியின் மூலமாகத் திண்டுக்கல் தியான மையம் சென்றோம். அங்கு கிடைத்த வழிகாட்டுதல்படி, முழுமையாக அன்னையை மட்டுமே நினைத்து, “இனி இவன் எங்கள் குழந்தை அன்று, உங்களிடம் ஒப்படைக்கிறேன். அவனை ஆப்பரேஷன் இல்லாமல் முழுமையாகக் குணமாக்கிக்கொடுங்கள்” என்று வேண்டியும், இடுப்பிலிருக்கும் சீழை அன்னையே கையால் எடுத்துக் கீழே போடுவது போலவும், அன்னையின் கண்களில் இருந்து வரும் பொன்னொளி அவன் உடம்பில் முழுவதுமாகப் பரவும்படியும் மனதில் தினமும் பிரார்த்தனை செய்தோம். மறுபடியும் மதுரைக்குச் சென்று பார்த்ததில் இடுப்பில் சீழ் இருப்பதற்கான அறிகுறி எதுவுமில்லை. வலியும் இல்லை. புண் நன்றாக ஆறிவிட்டது. ஆப்பரேஷன் தேவையில்லைஎன டாக்டர் கூறினார். அன்னையின் அருளால் பூரண குணம் அடைந்தான்.

மற்றொரு முறை பள்ளிக்குச் சென்றவன் வயிற்று வலியால் அழுது கொண்டு வந்தான். இம்முறையும் டாக்டரிடம் காண்பித்ததில், “குடல், குடல் உள்ளே (intussusception) இறங்கியுள்ளது. அதனால்

ஆப்பரேஷன் செய்தால் சரி செய்துவிடலாம்'' என்றனர். இப்பொழுது அன்னையைப் பற்றி நன்றாகப் புரிந்து கொண்டதால், தியான மையத்திற்குச் சென்று அமைதியாக அமர்ந்து பிரார்த்தித்துவிட்டு, மதுரைக்குச் சென்றோம். காலையில் எடுத்த ஸ்கேனில் இருந்தது, மாலையில் எடுத்த ஸ்கேனில் முழுவதுமாக மாயமாய் மறைந்திருந்தது. இப்படி ஓர் அதிசயத்தை அன்னையையன்றி வேறு யாராலும் நிகழ்த்த முடியாது.

எங்கள் குழந்தை எழுதிப் பழகுவதற்காக ஒரு கறுப்பு நிற பலகை வாங்கியுள்ளோம். அதில் அவனைத் தவிர வேறு யாரும் எழுதுவது இல்லை. எங்கள் பையனே எழுதி, அழித்துக்கொள்வான். அப்படி ஒரு நாள் அவன் எழுதி அழித்த பலகையை என் கணவரின் தம்பி செல்போனில் படம் எடுத்தபொழுது அன்னையின் திருமுகம் அதில் தெரிந்தது. எங்கள் வீட்டிற்கு வந்து அன்னை காட்சி அளித்தார் என்பதை நினைக்கும்பொழுது எங்கள் உடல் சிலிர்க்கிறது.

எங்கள் பையனுக்கு அன்னையின்மீது அளவு கடந்த பற்றுதல் உண்டு. தினமும் எங்களுடன் தியான மையத்திற்கு வந்து அன்னையை தரிசனம் செய்வான். தினமும் காலையும் மாலையும் ஸ்ரீ கர்மயோகி அப்பா அவர்கள் எழுதிய ''அன்னைக்கு ஓர் பிரார்த்தனை''யைத் தவறாமல் வாசிப்பான். பகவானும் அன்னையும் உள்ள டாலர் கழுத்தில் அணிந்திருப்பதை தினந்தோறும் குளிக்கும் பொழுது கழுவி சுத்தம் செய்வான். அன்னையின் பிரசாதப்பூ வைத்திருந்த காலியான பிளாஸ்டிக் கவரை வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்த விட மாட்டான். ''அன்னை தியான மையத்தில் கொடுத்தது, இதை அசுத்தப்படுத்தக் கூடாது'' என்பான். வீட்டில் மலர்ந்திருக்கும் பூக்களையும் தியான மையத்தில் கொடுத்த பிரசாதப் பூவையும் அவனே அடுக்கி வைப்பான். அன்னை எங்களை ஆரோக்கியத்திலும், அறிவிலும், செல்வத்திலும் நல்ல நிலையில் வைத்துள்ளதை நினைத்து அவருக்கு தினம்தினம் நன்றி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

*- J. சிவக்குமார், தனலட்சுமி, திண்டுக்கல்*

❀ ❀ ❀



# மரபு வழி வந்த ஆன்மீகமும் அன்னை ஸ்ரீ அரவிந்தரின் பூரணயோகமும்

N. அசோகன்

| வ.எண் | மரபு வழி வந்த ஆன்மீகம் | அன்னை ஸ்ரீ அரவிந்தரின் பூரண ஆன்மீகம் |
|---|---|---|
| 1. | படைப்பு என்பது ஒரு மாயை. நாம் அதிலிருந்து விடுபட வேண்டும். | படைப்பு ஒரு மாயை இல்லை. அது திருவுருமாற்றம் செய்யப்பட வேண்டிய ஒரு குறையாகும். |
| 2. | ஆன்மாவிற்கு வளர்ச்சி இல்லை. | ஆன்மாவும்கூட அதனுடைய பிரதிநிதியான சைத்தியப்புருஷன் மூலம் பரிணாம வளர்ச்சியை அடைகிறது. |
| 3. | கர்மத்தை அழிக்க முடியாது. | கர்மம்கூட அருளின் ஸ்பரிசம் பட்டால் கரையும். |
| 4. | ஐஸ்வரியம் ஆன்மீகத்திற்கு எதிரானது. | ஐஸ்வரியம் மகாலட்சுமியினுடைய வெளிப்பாடு என்பதால் அதை நாம் வரவேற்க வேண்டும். |
| 5. | உடலை வருத்திக் கொள்ளும் கடுமையான விரதம் நல்லது. வாழ்க்கையை அனுபவிப்பது தவறு. | உடலை வருத்திக் கொள்வது சரியில்லை. விழிப்புணர்வு இல்லாதவர்களுக்கு விழிப்புணர்வு வருவதற்கு வலி தேவைப் படுகிறது. மாறாக வாழ்க்கையை அனுபவிப்பது என்பது இறை ஆனந்தத்தின் வெளிப்பாடாக இருக்கும். |
| 6. | தெய்வங்கள் உயர்ந்தவர்கள். | மனிதனுக்கு ஆன்மா இருப்பதால் மனிதன் தெய்வங்களைவிட உயர்ந்தவன். தெய்வங்களுக்கு சைத்தியப்புருஷன் இல்லை என்பதால் அவர்களுக்கு வளர்ச்சி இல்லை. |

| | | |
|---|---|---|
| 7. | தவ வாழ்க்கையும், இல்லற வாழ்க்கையும் இணைக்க முடியாது. | ஆன்மீக நியதிகளின்படி அமைகின்ற இல்லற வாழ்க்கை தவத்தையும், இல்வாழ்க்கையையும் ஒருங்கிணைத்து யோக வாழ்க்கையாக மாற்றுகிறது. |
| 8. | சடங்கு, சம்பிரதாயங்கள் முக்கியம். | சடங்கு, சம்பிரதாயங்களை நாம் தவிர்க்கலாம். |
| 9. | பிரம்மத்தை உணர முடியாது. | பிரம்மத்தை உணரலாம். |
| 10. | ஆண்டவனை நாம் தூரத்தில் இருந்துதான் வழிபட முடியும். | நாமே இறைவனாக மாறலாம். |
| 11. | ஆண்டவனை மனிதன் தேடிப் போக வேண்டும். | மனிதனைத் தேடி இறைவன் வருகிறான். |
| 12. | பெண்களை ஒதுக்க வேண்டும். | பெண்களுக்கும் ஆன்மீகத்தில் சம உரிமையுண்டு. |

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

மனம் உடலை உற்சாகப்படுத்துமானால், உடலில் வளர்ச்சி ஏற்படும். உடலிலுள்ள மனம் அதைச் செய்தால், வளர்ச்சி அல்லது அடுத்த நிலைக்குப் போகும் வளர்ச்சிக்குப் பதிலாக பரிணாமவளர்ச்சி ஏற்படும். உடலில் மேலெழுந்தவாரியாகவுள்ள மனம், திறமை (skill) பெற உதவுகிறது.

***உடலின் அறிவு விழித்து, திறமை பெறுவது ஆன்மீகப் பரிணாமம்.***



# மனிதனுடைய இன்றைய நிலைமையும் அன்னை அவனுக்கு வழங்க விரும்புவதும்

N. அசோகன்

| **வ. எண்** | **மனிதனுடைய இன்றைய நிலைமை** | **அன்னை அவனுக்கு வழங்க விரும்புவது** |
|---|---|---|
| 1. | மனிதன் இன்பத்தை நாடுகிறான். | அன்னை அவனுக்கு பேரின்பத்தை வழங்குகிறார். |
| 2. | மனிதன் அவனுடைய சிறுமைகுணம் படைத்த அகம்பாவத்தை மையமாக வைத்து வாழ்க்கையை நடத்துகிறான். | அன்னை அவனுடைய ஆன்மாவை மையமாக வைத்து வாழ்க்கையை அமைத்துத் தர முன் வருகிறார். |
| 3. | பணம் மற்றும் வசதியைத்தான் மனிதன் தேடுகிறான். | அன்னை அவனுக்கு ஆன்மீகப் பொக்கிஷங்களை அளிக்கிறார். |
| 4. | பகுதியானதும், பிரிவினையை வலியுறுத்தக்கூடியதுமான அறிவை மனிதன் பாராட்டுகிறான். | அன்னை முழுமையானதும், ஒற்றுமையை வலியுறுத்தக் கூடியதுமான ஆன்மீக அறிவை அவனுக்கு வழங்குகிறார். |
| 5. | மனிதன் அடுத்தவர்களிடமிருந்து பெறுவதன் மூலம் வளர விரும்புகிறான். | அடுத்தவர்களுக்குக் கொடுத்து அதன் மூலம் வளர்வதற்கான வழியை அன்னை கற்றுத் தருகிறார். |
| 6. | மனிதன் வெளிச் செயல்பாடுகளையே முக்கியமாகக் கருதுகிறான். வெளி உலகம் அவன் வாழ்க்கையை நிர்ணயிப்பதாக நினைக்கிறான். | அவனுடைய வாழ்க்கையை அகத்திலிருந்து நிர்ணயிக்க அன்னை வழி சொல்கிறார். |

| வ. எண் | மனிதனுடைய இன்றைய நிலைமை | அன்னை அவனுக்கு வழங்க விரும்புவது |
|---|---|---|
| 7. | அவன் பணத்திற்குக் கட்டுப்பட்டு இருக்கிறான். | அவனை பணத்திற்கு அதிபதியாக்க அன்னை முன் வருகிறார். |
| 8. | புலனறிவை அவன் பாராட்டுகிறான். | உள்ளெழுச்சியாகக் கிடைக்கும் அறிவை அன்னை அவனுக்கு வழங்குகிறார். |
| 9. | மனிதன் அவனுடைய ஆசைகளுக்கு அடிமையானவன். ஒன்றன்பின் ஒன்றாகத் தன் ஆசைகளை நிறைவேற்றும் ஒரு முடிவில்லாத முயற்சியில் தன் வாழ்நாள் முழுவதும் செலவழிக்கிறான். | ஆசைகளிலிருந்து அவனை நிரந்தரமாக விடுவித்துப் பேரின்பத்தை அவனுக்குச் சொந்தமாக்க அன்னை முன் வருகிறார். |
| 10. | அவனுடைய பார்வை, பகுதியானது மற்றும் தற்காலிகமானது. | கடந்த காலம், எதிர்காலம் என்று எல்லாவற்றையும் உள்ளடக்கிய பூரணப் பார்வையை அன்னை அவனுக்கு அளிக்கிறார். |
| 11. | காலம் மற்றும் இடத்திற்கு மனிதன் கட்டுப்பட்டு இருக்கிறான். | காலத்தையும், இடத்தையும் கடந்து செல்லக்கூடிய ஒரு ஆன்மீகசக்தியை அன்னை அவனுக்கு அளிக்கிறார். |
| 12. | தனக்கு வேண்டியதை பெற்றுக் கொள்ள அவன் வாழ்க்கையைத் தேடிப் போகிறான். | அவனுக்கு வேண்டியதை வழங்க வாழ்க்கை அவனைத் தேடி வரும்படி அன்னை செய்கிறார். |

❀ ❀ ❀

Printed by Mrs. Anuradha Sriram, Integra, No.51, II Cross, Jawahar Nagar, Nellithope Post, Pondicherry-5 and Published by Mr. P.V. Balakrishnan, 12, First Cross, Venkata Nagar, Pondicherry-11 on behalf of The Mother's Service Society, Pondicherry-11.
Editor: N. Asokan

# பச்சிலை

சென்ட் வியாபாரத்தில் Patcholiஎன ஒரு சென்ட் உண்டு. இது எப்படி உற்பத்தியாகிறதுஎன டிக்ஷனரியைப் பார்த்த பொழுது, இதன் மூலம் தமிழ்மொழி எனவும், மூலச்சொல் பச்சிலை எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. பச்சிலைஎன்ற சொல் ஆங்கிலேயனுக்கு வாராததால் பச்சோலி என்றான். அதனால் அதன் பெயர்த் தொழிலில் பச்சோலிஎன மாறிவிட்டது. நாமும் அதைப் பச்சோலி என்கிறோம். மூடநம்பிக்கையின் வரலாறு இதுவேயாகும்.

தமிழிலிருந்து ஆங்கிலத்தில் நுழைந்த சொற்கள் பல. கட்டு மரம் அவற்றுள் ஒன்று, Catamaran என்றாயிற்று. கணக்குப்பிள்ளை என்பது conicapollyஆக மாறி accountant ஆயிற்று. காசுஎன்பது cash ஆயிற்று.

சமஸ்கிருதத்தினின்று ஆங்கிலம் பெற்றவை பல சொற்கள். தடாகம் tank எனவும், விதவை widow எனவும், சூன்யா மாறி cipher எனவுமாயின.

ஆங்கிலத்திலிருந்து தமிழ் பெற்ற சொற்கள் cup - கோப்பை, tumbler - டம்பளர், road - ரோடு, hearing - ஈரங்கி, rascal - ராஸ்கோலு, wrong - ராங்கி, receipt - ரசீது, pen - பேனா, hotel - ஓட்டல், bus - பஸ், tractor - டிராக்டர், coffee - காப்பி, paper - பேப்பர், phonograph - பூனைகிராப், acre - ஏக்கர், Jesus - ஏசு, calendar - காலண்டர், manager - மானேஜர், driver - டிரைவர், owner - ஓனர், cleaner - கிளீனர், petrol - பெட்ரோல், factory - பாக்டரி.

தமிழிலுள்ள சமஸ்கிருத சொற்கள்: சத்தியம், ஆன்மா, பிரம்மம், வாஸ்தவம், உற்சாகம், புஸ்தகம், ஜமீன், சௌகரியம், வார்த்தை, உபாத்தியாயர், குரு, சிஷ்யன்என கால் பாகம் நாம் பயன்படுத்தும் சொற்கள் சமஸ்கிருதம். இந்திய மொழிகளில் சமஸ்கிருதம் 25% முதல் 65% வரை கலந்துள்ளது. ஆன்மீகப் பண்பை ஏற்றதால் அம்மொழி நாட்டில் பரவியது.

- ✡ மொழி, பல மொழிச் சொற்களால் பெருகுவது தவறன்று. இது இயல்பு.
- ✡ ஆங்கிலத்திலிருந்து கிரீக், லத்தீன், ஸ்பானிஷ், பிரெஞ்சு, ஜெர்மன் சொற்களை எடுத்துவிட்டால் ஆங்கிலம் எழுத முடியாது.
- ✡ ஒரு மொழியில் பேரிலக்கியம் உற்பத்தியாக சமீபகாலக் கலப்பு மொழிகள் தடை. மொழி ஆழ்மனச் சொத்து. இலக்கியம் ஆழ்மனத்தில் உற்பத்தியாவது.
- ✡ மூட நம்பிக்கை - மொழி விஷயத்தில் - இலக்கியம் எழுதுவதற்குத் தடை.

❀ ❀ ❀

# சம்மர்ஹில் Summer Hill

மாணவர்கள் சுதந்திரமாகப் படிக்கவேண்டும்என்று 1929இல் இங்கிலாந்தில் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி. வகுப்புகள் நடக்கும். மாணவர்கள் வர வேண்டும் என்ற அவசியமில்லை. பரீட்சைகள் இல்லை. கண்டிப்பு என்பதேயில்லை. மாணவர்கள் எப்பொழுதும் வரலாம், போகலாம், எந்த வகுப்பிலும் போய் உட்காரலாம், எந்த ஆசிரியர் உதவியையும் நாடலாம்.

- ✡ இப்பள்ளியில் பயின்றவர்கள் வாழ்க்கையில் அபரிமிதமான வெற்றி பெற்றுள்ளனர்.

  ஒருவர்கூட அரசியலில் சேரவில்லை.

மொத்த மாணவர்கள் 59 பேரேயாகும். சமீபத்தில் இங்கிலாந்து அரசு இப்பள்ளி மீது நடவடிக்கை எடுத்து மூடப் போவதாக எச்சரித்தது. நிர்வாகம் கோர்ட்டுக்குப் போயிற்று. அத்தனை மாணவர்கள், பெற்றோர்கள் வாக்குமூலம்தர முன்வந்தனர்.

- ✡ இது உலகில் முதன்மையான பள்ளி.
- ✡ பெற்றோரும் மாணவர்களும் போற்றும் பள்ளி.
- ✡ இதன் மாணவர்கள் மாணிக்கங்களாக மாறியவர்கள்.

அரசு எதிர்க்கிறது, மூட நினைக்கிறது. (Attendance) வருகையில்லைஎனக் கூறுகிறது. பள்ளியின் கொள்கை வருகை தேவையில்லைஎன்பது. பள்ளி வழக்கை வென்றது. மாணவர்களும், பெற்றோரும், ஆசிரியர்களும் கோலாகலமாகக் கொண்டாடித் தீர்ப்பை வரவேற்றனர்.

- ✡ பழைய சம்பிரதாயம் அவதாரப் புருஷனையும் எதிர்க்கும்.
- ✡ படித்த மக்கள் உள்ள இங்கிலாந்தின் நிலை இதுவானால், இந்தியாவில் ஸ்ரீ அரவிந்தம் எப்படி எதிர்க்கப்படும்என்று கற்பனை செய்யலாம்.

அன்னை செய்தவை அனைத்தும் சம்பிரதாயத்திற்கு நேர் எதிரான செய்கையாகும்.

❀ ❀ ❀

May 2009 Jiviyam 15 Malar 1
Regd. with the Registrar of Newspaper for India under No.32/01/95/TC (PON TAM 00184)
Malarndha Jiviyam Postal Regn. No.TN/PMG(CCR)/114/09-11
Price: Rs.5/- WPP No.45/09-11

புதிய வெளியீடுகள்

கர்மயோகியின்

**பரம்பொருள் III** ரூ.200/-

**எங்கள் குடும்பம் (பாகம் 2)** ரூ.250/-

**உலகம் - மோட்சம் - ஸ்ரீ அரவிந்தம்** ரூ.100/-

**யோக வாழ்க்கை விளக்கம் IV** ரூ.150/-

சொசைட்டியின் பிற வெளியீடுகள்

**லைப் டிவைன் விரிவுரைகள்** ரூ.100/-
*தமிழாக்கம்:* என். அசோகன்

**SATYA JYOTHI** ரூ.200/-
(CONCISE TRUISMS)
N.Asokan

தபாலில் பெற புத்தக விலையுடன் பதிவுத் தபால் கட்டணம் ரூ.20/- சேர்த்து M.O. செய்யவும்

கிடைக்குமிடம்

பாண்டியில்
மதர்ஸ் ஸர்வீஸ் சொசைட்டி,
5, புதுவை சிவம் தெரு,
வெங்கட்ட நகர் விரிவு,
புதுச்சேரி - 605 011.
✆: (0413) 2212443, 2214231

சென்னையில்
மாம்பலம் தியான மையம்,
"சுந்தரம்",
24, 1வது குறுக்குத் தெரு,
மேற்கு C.I.T. நகர், சென்னை - 600 035.
✆: (044)-24347191